# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN




**TAMILNADU ASSEMBLIES OF GOD NEWS MAGAZINE**

November - December 2019
Volume : 59

ஆண்டு சந்தா ₹ 100/-
Issue : 6

## வாலிபர் முகாம் - அந்தமான்










## வாலிபர் முகாம் - திருச்சி










## ஆண்கள் முகாம் - செங்கை மண்டலம்





ஆசிரியரிடமிருந்து........!

# சமாதானப் பிரபு இயேசு



கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களுக்கு சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி, “நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும் அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, **சமாதானப்பிரபு** என்னப்படும்” என்று முன்னுரைக்கிறார் (ஏசாயா 9:6). மீகா என்னும் தீர்க்கதரிசியும் இயேசுவைக் குறித்து “இவரே சமாதானக் காரணர்'' என்கிறார் (மீகா 5:5). ஆசாரியனாகிய சகரியா தீர்க்கதரிசனமாய், “நம்முடைய கால்களை சமாதானத்தின் வழியிலே நடத்த வந்த அருணோதயம் இயேசு” என்று பாடுவதை வாசிக்கிறோம் (லூக்கா 1:78,79). இப்படி நமக்காக பிறந்த இயேசு, நம்முடைய வாழ்விலே சமாதானப்பிரபுவாக எவ்விதம் செயல்படுகிறார் எனவும், அவர் நமக்கு அளிக்கும் சமாதானத்தின் மகத்துவம் எத்தகையது என்பதைக் குறித்தும் பகிர்ந்து கொள்ளவிரும்புகிறேன். மூன்று நிலைகளிலே இயேசு நமக்கு சமாதானம் அளிக்கிறார்.

## 1. உன்னத தேவனோடு சமாதானம்<br>UPWARD PEACE

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 5:1). நாம் தேவனுக்கு சத்துருக்களாய் இருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோம் (ரோமர் 5:10). நாம் எப்படி தேவனுக்கு சத்துருக்கள் ஆனோம்? ஆதாம் ஏவாள் என்னும் முதல் மனிதர்களுடைய பாவத்தினால் முழு மனுக்குலமும் பாவத்திற்குள்ளானது (ரோமர் 5:12). ஆகவேதான் தாவீது “என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்” என்று கூறுகிறார் (சங்.51:5). “உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது” என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 59:2). நம் பாவத்தினால் நாம் மரணத்துக்கு பாத்திரர்களானோம் (ரோமர் 6:23). நம்முடைய பாவங்கள் நம்மை படைத்த தேவனிடம் நமக்கு இருந்த உறவையும் சமாதானத்தையும் கெடுத்து போடுகிறது. இயேசுவோ தமது பரிசுத்த இரத்தத்தை சிந்தி, நமக்கு சமாதானத்தை உண்டாக்கி, உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கினார் (கொலோ. 1:20). மேலும் இயேசுவே நம்முடைய சமாதான காரணராகி, தேவனோடு நமக்கிருந்த பகையை சிலுவையினால் கொன்று, நம்மை புதிய மனுஷராக்கி, சமாதானம்பண்ணி, தேவனுடன் நம்மை ஒப்புரவாக்கினார் (எபேசி. 2:14-16).

பாவம் நம் சமாதானத்தை கொள்ளையாடிவிடும். "துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை" (ஏசாயா 48:22; 57:21). பாவிகளின் வாழ்வு சமாதானமின்றி கொந்தளிக்கிற கடல்போல் இருக்கும் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 57:20). அநேக பாவங்களினால் சமாதானம் இழந்து தவித்த ஒரு பெண், இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் அவரிடம் மன்னிப்பு பெற வேண்டி அவரை தேடி வந்தாள். இயேசு அவளை நோக்கி, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது; சமாதானத்தோடே போ" என்றார் (லூக்கா 7:37,48,50). உன்னத தேவனோடு நம்மை ஒப்புரவாக்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். தேவனோடுள்ள சமாதானத்தை இழந்து தவிக்கிறீர்களோ? இன்றே உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, மனம் திரும்பி, இயேசுவின் இரத்தம் அருளும் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

## 2. உள்ளத்தில் சமாதானம்
## INWARD PEACE

"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக". "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 14:1,27). பயங்களும், கவலைகளும் உள்ளத்தின் சமாதானத்தை கெடுக்கிறது. உலகம் தரும் சமாதானம் நிலையற்றது. ஆனால் இயேசுவோ நம் உள்ளத்தை கலங்கச் செய்யும் பயங்களையும் கவலைகளையும் முற்றிலும் நீக்கிவிடுகிறார். இது எப்படி நடக்கும்? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? தேவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து அவரை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும். "உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 26:3). பூரண சமாதானம் என்றால் நிலையான, எப்பொழுதும் நிலைத்திருக்கும் சமாதானம் ஆகும். தேவன், தம்மை முழுமையாய் நம்பிப் பற்றிக்கொள்கிறவர்களுக்கு தெய்வீக பாதுகாவலையும், பராமரிப்பையும் நிரந்தரமாக வழங்குகிறார் என்பதே இதன் பொருள்.

நாம் எதைக் குறித்தும் கவலைப்படாமல் தேவனிடத்தில் நம் உள்ளத்தை ஊற்றிவிடும்போது, அவருடைய பூரண சமாதானம் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ளும் என்று பவுல் கூறுகிறார் (பிலி.4:6,7). 12 வருடகாலமாக பெரும்பாடு என்னும் நோயினால் அவதியுற்று, அனைத்தையும் செலவழித்தும் சுகமின்றி, சமாதானமின்றி தவித்த ஒரு பெண் இயேசுவை முழுமையாக விசுவாசித்த போது அற்புத சுகமும், சமாதானமும் பெற்றாள் (லூக்கா 8:43-48). யூதரைக் குறித்த பயத்தினால் கலங்கியிருந்த அப்போஸ்தலருக்கு இயேசு சமாதானம் தந்து தேற்றினார் (யோவான் 20:19,21,26). மீதியானியரால் தாக்கப்படுவோம் என்று அஞ்சி வாழ்ந்த கிதியோனுக்கு "சமாதான கர்த்தராக" (யெகோவா ஷாலோம்) தரிசனமாகி அவனை திடப்படுத்தினார் (நியா.6:23,24). இன்றே உங்கள் உள்ளத்தை கலங்கச் செய்யும், பயங்களையும், கவலைகளையும் சமாதானப்பிரபுவாகிய இயேசுவிடம் ஒப்படைத்து, அவர் தரும் தெய்வீக பூரண சமாதானத்தை உள்ளத்தில் பெற்று மகிழுங்கள்.

## 3. உறவுகளில் சமாதானம்
## OUTWARD PEACE

உன்னத தேவனோடும், உள்ளத்திலும் மட்டும் அல்ல; நம் உறவுகளிலும் நமக்கு சமாதானத்தைத் தர இயேசு விரும்புகிறார். "கூடுமானால் உங்களால் ஆன மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" என்று வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது (ரோமர் 12:18; எபி. 12:14). இன்று பல குடும்பங்களிலே சமாதானம் இன்றி வன்முறை நிலவுகிறது. கணவன் மனைவிக்கிடையே சமாதானமின்றி விவாகரத்துகள் பெருகியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளுக்குள் சமாதானமில்லை. அண்ணன் தம்பிக்குள் சமாதானமில்லை. இப்படி உறவுகளிலே சமாதானமின்றி போவதற்குக் காரணம் அன்பின்மையும், அகம்பாவமும் (Ego), மன்னியாமையுமே. இயேசு நம்மீது வைத்த நிபந்தனையற்ற அன்பினாலே தாம் தேவனுடைய ரூபமாயிருந்தும் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலாகி, மரண பரியந்தம் கீழ்படிந்து, தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று வாசிக்கிறோம் (பிலிப்பியர் 2:6-8). மேலும் இயேசு முந்தி நம்மில் அன்புகூர்ந்து, நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காக சிலுவையில் மரித்து, தம்முடைய நிபந்தனையற்ற அன்பை விளங்கப்பண்ணினார் (ரோமர் 5:8).

இயேசுவை பின்பற்றும் நம்மிடம் இப்படிப்பட்ட தாழ்மையின் சிந்தையும், நிபந்தனையற்ற அன்பும் இருக்குமாயின் நமது உறவுகளில் சமாதானம் உண்டாகும். இயேசு நம்முடைய சமாதான காரணராய் இருந்து பகையாகிய நடுச்சுவரை தகர்த்து போடுகிறார் (எபே. 2:14). இயேசு கூறிய கெட்டக்குமாரனைப் பற்றிய உவமையை லூக்கா 15:10-24 வசனங்களில் வாசிக்கிறோம். ஆணவத்தினால் தன் தந்தையை விட்டுபிரிந்து சென்ற இளையமகன், தனது தவறை உணர்ந்தவனாய், மனம்வருந்தி, தாழ்மையுடன் தன் தந்தையிடம் மன்னிப்பு கோர வருவதையும், அவன் கேட்கும் முன்னரே அவன் தந்தை தனது நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தி அவன் செய்த குற்றத்தை மன்னிப்பதையும் பார்க்கிறோம். இத்தகைய அன்பும், தாழ்மையும், மன்னித்தலுமே உறவுகளிலே நிலையான சமாதானத்தையும், அந்நியோந்நியத்தையும் கொண்டு வரும். இன்று உங்கள் உடைந்த உறவுகளையும், நீங்கள் இழந்து போன உறவுகளையும் எண்ணி கண்ணீர் வடிக்கிறீர்களோ? கவலைப்படாதீர்கள். நீங்கள் அன்புடனும், தாழ்மையுடனும் மன்னிக்கவும், மன்னிப்பு கேட்கவும் தயாராக இருப்பீர்களானால், உங்கள் உறவின் விரிசல்களை சரி செய்யவும், நீங்கள் இழந்த உறவுகளை மீட்டுத்தரவும் இயேசு வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கும் தேவன் சமாதானத்தின் தேவன் (ரோமர் 15:33; எபிரெயர் 13:20), சமாதானப்பிரபு மற்றும் சமாதானக்காரணர் (ஏசாயா 9:6; மீகா 5:5). அவர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் (சங். 29:11) என்று வேதம் கூறுகிறது. ஆகவே அன்புக்குரியவர்களே, இயேசு கிறிஸ்துவின் பூரண சமாதானம் உங்கள் வாழ்வில் நிறைந்து, பெருகுவதாக!

**சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும்**
**உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக.**
**கர்த்தர் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பாராக (2 தெச. 3:16)!**

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி



# ஆதி சபையிலிருந்து கற்றுக்கொள்வோம்

Rev. P.S. ராஜமணி

இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

## 6. நற்செய்தி பணியே சபையின் முக்கியப் பணியாயிருந்தது

**அன்று**

**இயேசுவின் பிரதான கட்டளை**

"அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி, வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்" ஆமென் (மத். 28:18-20).

இந்த பிரதான கட்டளைக்கு அப்போஸ்தலரும் விசுவாசிகளும் முழுவதுமாய் கீழ்ப்படிந்து, இயேசுவின் நற்செய்தியை அறிவித்தனர். அன்றிருந்த யூதர்களுக்கும் இது பயங்கர துர்உபதேசமாய் காணப்பட்டது.

நமது ஊரிலேயே தச்சனுடைய குமாரனாக வாழ்ந்து வந்த இயேசு என்ற வாலிபரை ஓர் தீர்க்கதரிசியாக எடுத்துக்கொள்ளலாம். அவர் செய்த அற்புத அடையாளங்களெல்லாம் ஆச்சரியமானவைகள் தான். ஆனால் அவர் தான் நாம் எதிர்பார்த்திருக்கிற மேசியா என்று எடுத்துக்கொள்ள முடியாது. மேசியா தாவீதின் வம்சத்தில் பிறப்பார், புறஜாதிய ஆட்சியை கவிழ்த்துவிட்டு, இஸ்ரவேலருக்கு ராஜாவாகி ஆளுகை செய்வார் என்று கூறப்பட்டுள்ளதே. இந்த இயேசு, சிலுவையில் அறையப்பட்டு மரித்துவிட்டாரே என்று குழம்பிப் போயிருந்தனர். இந்த இயேசுதான் கிறிஸ்து (மேசியா) என்று அப்போஸ்தலர் பிரசங்கித்தபோது கடுமையான எதிர்ப்பு எழும்பியது.

**யூதர்கள் மிகக் கடுமையாக இயேசுவின் நற்செய்தியை எதிர்க்க காரணங்கள் என்ன?**

1. இயேசு ஒரு தீர்க்கதரிசி மட்டுமே என்று நம்பினர். அவர்தான் மேசியா (கிறிஸ்து) என்று பிரசங்கித்தது அவர்களுக்கு தேவ தூஷணமாகத் தெரிந்தது.
2. இனி பலி முறைகள் வேண்டாம். இயேசு கிறிஸ்து நமக்காக பலியானார் என்று அப்போஸ்தலர்கள் பிரசங்கித்தனர்.
3. மோசே கால முதல் பின்பற்றி வந்த விருத்தசேதனம் இனி வேண்டாம் என்று கூறியது.
4. புறஜாதியாரும் இந்த சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து தேவ மக்களாக மாற முடியும் என்று பிரசங்கித்தது.

சுமார் 1500 வருடங்களாக பின்பற்றி வந்த வேத சத்தியங்களுக்கு மாறான துர் உபதேசங்கள் இவை என்று யூதர்கள் கோபமடைந்தனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நற்செய்தி அறிவித்தது எத்தனை பாடுகளைக் கொண்டு வந்திருக்கும் என்று நாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**இந்த அப்போஸ்தலர்கள் யார் என்று யூதர்கள் எண்ணினர்?**

1. இவர்கள் யூத மார்க்கத் தலைவர்கள் அல்ல.
2. இவர்களுக்கு வேத வசன விளக்கம் தெரியாது.
3. இவர்கள் படிப்பறியாத பாமர மீனவர்கள்.
4. மக்களை யூத மார்க்கத்தைவிட்டு வழிவிலகச் செய்கின்றவர்கள்.

இப்படிப்பட்டவர்களை நம்பி ஆபிரகாம் கால முதல் கைக்கொண்டு வந்த வேத வசனங்களை புறக்கணிக்கலாமா என்று எண்ணினர். அதனால் அப்போஸ்தலரையும், மற்றவர்களையும் துன்புறுத்தினர். கொலை செய்யவும் தயங்கவில்லை.

ஆனால் அப்போஸ்தலர் உறுதியாக நின்று நற்செய்தி அறிவித்து இயேசுவே நாம் எதிர்பார்த்திருந்த கிறிஸ்து (மேசியா) என்று பலமாய் சாட்சி கொடுத்தனர். உபத்திரவத்தினிமித்தம் ஊரை விட்டே ஓட வேண்டியிருந்த போதும் நற்செய்திப் பணியை தங்கள் பிரதான ஊழியமாக செய்தனர் (அப். 8:4).

**நற்செய்திப் பணி செய்ததால் அப்போஸ்தலர் அனுபவித்த உபத்திரவங்கள்**

1. சிறையில் அடைக்கப்பட்டனர் (அப்.4:3; 5:18; 8:3; 12:4).
2. நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரிக்கப்பட்டனர் (அப். 4:7).
3. பயமுறுத்தப்பட்டனர் (அப். 4:17,21).
4 இனி இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசக்கூடாது என்று கட்டளையிடப் பட்டார்கள் (அப். 4:18).
5. அப்போஸ்தலரை கொலை செய்ய திட்டமிட்டனர் (அப்.5:33; 9:23;29).
6. அப்போஸ்தலரை அடித்தார்கள் (அப்.5:40).
7. பலர் கொல்லப்பட்டனர் (அப்.7:60; 11:2).

இவ்வளவு இடர்களுக்கு மத்தியிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எங்கும் பரப்பினர். யூதேயா, சமாரியா, கலிலேயா மட்டுமல்ல உலகமெங்கும் நற்செய்தி பரவிற்று. நற்செய்தியை அறிவித்து அதை ஏற்றுக்கொண்டவர்களைக் கொண்டு சபைகள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன.

**இன்று**

சபைகளில் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்ச்சி ஞாயிறு ஆராதனை மட்டுமே. எந்த கிறிஸ்தவ ஸ்தாபனும் இதற்கு விதிவிலக்கானதல்ல. போதகர் அதிகமாய் ஜெபித்து தேவ செய்தியை ஆயத்தப்படுத்துவது ஞாயிறு ஆராதனைக்குக்குத்தான். ஆராதனையின் பாடல்கள், திட்டம் பண்ணப்படுகின்றன. வாத்தியக் கருவிகள் ஆயத்தமாயிருக்கின்றன. அறிவிப்புகள் எழுதி வைக்கப்படுகின்றன. விசுவாசிகள் பக்திவிருத்தியடைவது அவசியம்தான். சபை கூடி வருதல் மிக மிக அவசியம் (எபி.10:25). ஆனால் ஆராதனை மார்க்கச் சடங்காச்சாரமாய் மாறிவிடுகின்ற ஆபத்து ஏற்படுகிறது. பல ஆண்டுகள் சத்தியத்தைக் கேட்டும் கர்த்தருக்காக ஒன்றும் செய்யாத ஒரு பெருங்கூட்டம் சபைக்குள்ளிருக்கிறது. இவர்களுக்கே திரும்பத் திரும்ப புதிய புதிய செய்திகள் பிரசங்கிக்கப்படுகின்றன. சிறப்புக் கூட்டங்கள், எழுப்புதல் கூட்டங்கள், கருத்தரங்குகள் ஏராளம் நடைபெறுகின்றன. 100 பேரில் 10 பேர் கூட செயல்படாதவர்களாயிருக்கின்றனர். இயேசுவின் பிரதான கட்டளை முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. சில சபைகளில்

நற்செய்திப் பணிக்குழு என்று நியமித்து சிலர் மட்டும் அதைச் செய்கின்றனர். மீதிப் பேரெல்லாம் செயல்படாத அங்கத்தினர்களாக இருக்கின்றனர். ஏராளமான சபைகளில் இப்படிப்பட்ட நற்செய்திப் பணி கிடையாது.

இன்று பெரிய கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் என்று அழைக்கப்படும் சபைகளில் நற்செய்திப் பணி "0" (பூஜ்யம்) தான். ஆவிக்குரிய சபைகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் சபைகள் மூலம்தான் ஓரளவு நற்செய்திப் பணி நடைபெறுகிறது. இவர்களில் அநேகர் ஒரு சபைக்குப் போகும் விசுவாசிகளை தங்கள் சபைக்கு இழுக்கும் இழுக்கான செயல்களையும் செய்கின்றனர்.

"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி.9:16) என்பதெல்லாம் பவுலுக்குத் தான் சரி என்ற அளவில் நடந்து கொள்ளுகின்றனர். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பிறருக்கு நற்செய்தி அறிவித்து சபைக்கு மக்களைக் கொண்டு வர வேண்டும் என்ற உணர்வை பெறவேண்டும்.

"கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். ஆகையால் ரோமா புரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1:14,15,16). நற்செய்தி அறிவிப்பதை தன் கடமை என்று மட்டுமல்ல, தன் கடன் என்றும் பவுல் எண்ணினார்.

இந்த உணர்வு தமிழ்நாட்டிலுள்ள எல்லா விசுவாசிகளுக்கும், போதகர்களுக்கும் வந்துவிட்டால் தமிழ்நாட்டை எளிதாய் இயேசுவுக்கு சொந்தமாக்க முடியும். இந்த வாஞ்சை இந்தியாவிலுள்ள அனைத்து தேவ பிள்ளைகளுக்கும் ஏற்பட்டால் இந்த பாரத தேசம் இயேசுவின் தேசமாய் மாறும்.

ஒவ்வொரு சபையின் பிரதான ஊழியம் நற்செய்தி அறிவிப்பதாகவே இருக்க வேண்டும். அதுவே அதிகமாய் வலியுறுத்தப்பட வேண்டும். சபை ஆரம்பித்த நாட்களில் ஓடி ஆடி உழைத்த போதகர்கள் 100,200,300 விசுவாசிகள் வந்தவுடன், நிலம் வாங்கி, ஆலயம் கட்டி நிறைவடைந்து விடுகின்றனர். இந்த கிராமம் முழுவதும் இரட்சிக்கப்பட வேண்டுமே. இந்தப் பட்டணம் முழுவதுமே மனந்திரும்ப வேண்டுமே. அதற்கான நற்செய்திப் பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமே என்ற தாகம் குறைந்து வருகின்றதே!

தமிழ்நாடும், இந்தியாவும் என்றைக்கு இயேசுவை ஏற்றுக்கொள்ளப் போகின்றன? கர்த்தர் நமது கண்களைத் திறந்து நமது கிராமத்தையும், பட்டணத்தையும், மாநிலத்தையும், நாட்டையும் பார்க்கச் செய்வாராக!!.

தொடரும்

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

**" Tamil District Council of SIAG "**

என்ற பெயரில் காசோலை அல்லது DD எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு சென்னையில் உள்ள நமது பொருளாளர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

The Treasurer,
Tamil District Council of SIAG, E-17, Anna Nagar, Chennai - 600 102



# நீங்களும் பைபிளை வாசிக்கலாம்

## You too can read the Bible


**Rev. Dr. L. ஜெயபாலன்**

மண்டல தலைமைப் போதகர், திண்டுக்கல் மண்டலம்


நாம் வாழ்கின்ற இவ்வுலகிலே ஏராளமான நூல்கள் உள்ளன. ஆரம்ப பள்ளி முதற்கொண்டு, சர்வ கலாசாலை படிப்பு வரை ஒருவர் பல நூல்களை படிக்க வேண்டும். ஆராய்ச்சி செய்ய வேண்டும். பாடப் புத்தகங்கள், வரலாற்று நூல்கள், துப்பறியும் நாவல்கள், சுயசரிதை நூல்கள், சமய நூல்கள் என நூல்கள் பலவகைப்படும்.

தலைவர்களாய் இருந்தவர்கள் பல நூல்களை வாசித்தவர்களே. "All Leaders were Readers" நல்ல நூல்களை வாசிப்பதால் அறிவு பெருகும். ஆபாச நூல்களை வாசிப்பதால் பாவம் பெருகும், அறிவு மங்கும். சமய நூல்கள் எல்லாம், மனிதர்களுக்கு அறநெறியை போதிக்கக்கூடியவை.

### இன்று நீங்கள் வேதம் வாசித்தீர்களா?

பைபிள் என்ற வார்த்தை "பிப்லோன்" (Biblon) என்ற கிரேக்க வார்த்தையின்படி "புத்தகம்" அல்லது "நூல்" என்பதாகும். இரண்டாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் "பிப்லியா" என்ற வார்த்தையை நூல்களுக்கு உபயோகித்தனர். "பாப்பிரஸ்" என்ற நாணலில் எழுதப்பட்டது. "பிப்லோஸ்" (Biblos) என அழைக்கப்பட்டது. கி.பி. 347-407 வாழ்ந்த கிறிஸ்தோத்தம் என்ற சபைப் பிதா, முதன்முறை BIBLE என்ற வார்த்தையை உபயோகித்தார். இது உலகத்திலேயே உள்ள ஒப்பற்ற ஒரு நூலாகும். இது கிறிஸ்தவர்களின் புனித நூலாக இருந்தபோதிலும், அகிலமெங்கிலும் அதிகமாக விற்பனை செய்யப்படக்கூடிய ஒரு பொக்கிஷமாகும்.

நான் 1964-ல் ஆண்டு இறையியல் கல்லூரியில் (பெங்களூர்) படிக்கையில் "பைபிள் கடவுளால் அருளப்பட்ட வார்த்தையாகும். கடவுளிடமிருந்து மனிதனுக்கு அருளப்பட்ட வெளிப்பாடு. மனிதனுடைய நடத்தைக்கும், நம்பிக்கைக்கும் உரிய மாறாத பிரமாணம்" என்று எனது ஆசிரியர் போதித்தார்.

### இது ஒரு சிறந்த அறிவுக் களஞ்சியம்

வேதாகமம், உலகம் உருவானதைக் குறித்தும், குறிப்பாக இஸ்ரவேலரின் வரலாறு குறித்து நாம் அறிய முடிகிறது. இந்நூலில் மருத்துவம், விஞ்ஞானம், இசை, உளக்கட்டுபாடு, உளவியல், வாழ்க்கையின் தத்துவம் போன்றவை அடங்கியுள்ளன. இதனுடைய மையக் கருத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வரும் இரட்சிப்பாகும்.

**வரலாறு** : "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி.1:1). "மனிதனை மண்ணினாலே உருவாக்கினார்" (ஆதி.2:7).

**மருத்துவம்** : எட்டாம் நாளில் ஆண்குழந்தைகள் விருத்தசேதனம் பண்ணப்படுதல் (ஆதி.17:12). பிள்ளைப் பிறந்த 5-ம் நாள் முதல் 7 நாளுக்குள் K வைட்டமின் உருவாகிறதாம். 8-ம் நாளில் விருத்தசேதனம் செய்வதால் இரத்தம் உறைய உதவும்.

**மருத்துவச்சிகள்** : ஆதி.35:17 "பிரசவிக்கும்போது அவளுக்கு கடும்வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப்பார்த்து பயப்படாதே இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய்" என்றாள்.

**உளவியல்** : “அமைதியான உள்ளம் உடலுக்கு உயிர்” (நீதி.14:30).

**விஞ்ஞானம்** : யோபு 38:41 “நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கே இருந்தாய்” (யோபு 38:4).

**பூமி உருண்டையானது** : “அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர் பூமியை அந்தரத்திலே தொங்கவிடுகிறார்” (ஏசா.40:22).

**மனதைக் கட்டுப்படுத்துதல்** : “உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” (ரோமர் 12:2).

**பாவமன்னிப்பு** : “நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12).

## பைபிளுள்ள மொத்த நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்புகள்

இதில் 66 நூல்கள் உள்ளன. பழைய ஏற்பாடு 39. புதிய ஏற்பாடு 27. பழைய ஏற்பாடு எபிரெய பாஷையில் எழுதப்பட்டது. இது சித்திரத்தன்மை உடைய மொழி.

**கி.மு. 280-150** : அலெக்சாண்டிரியாவல் 70 பேர்கள் கொண்ட குழுவினர் இதை கிரேக்க மொழியில் மொழி பெயர்த்தனர். LXX இது SEPTUGINT (செப்துஜிவந்து) என அழைக்கப்படுகிறது. கிரேக்கம், கலாச்சார, தத்துவ, பகுத்தறிவு மொழியாக அன்றைய உலகில் காணப்பட்டது.

**கி.பி. 383-405** : ஜெரோம் என்ற சபை பிதா இதை இலத்தீனில் மொழிபெயர்த்தார். இது வல்கேட் என அழைக்கப்படுகிறது. 1320-84 விக்ளிப் என்பவர் வல்கேட்டிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**16-ம் நூற்றாண்டு** : சபையின் சீர்த்திருத்தவாதியான மார்ட்டின் லூத்தர் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். டிண்டேல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

## முதல் அச்சடிக்கப்பட்ட நூல்

1450-ம் ஆண்டு குட்டன் பெர்க் என்பவர் பைபிளை முதன் முதலில் புத்தகமாக அச்சிட்டார்.1611-ம் ஆண்டு கிங் ஜேம்ஸ் என்ற மன்னரால் பைபிள் அச்சடிக்கப்பட்டது. உலகிலே அதிகமாக விநியோகிக்கப்படும் நூல் பரிசுத்த வேதாகமம். அதிகமாக விற்கப்படுவதும் வேதாகமமே. ஆரம்ப நாட்களில் பைபிள் கையால் எழுதப்பட்டு (தோள் சுருள்களில்) பின்னர்தான் புத்தக வடிவில் வெளியானது. ஆலயத்தில் மிகப்பெரிய புத்தகமாக (கையில் எழுதப்பட்டு) ஒரு சங்கிலியால் இணைக்கப்பட்டு இருந்தது. அதன் ஒரு பகுதியை ஒருவர் வாசிக்கையில் அங்கத்தினர்கள் பயபக்தியுடன் எழுந்து நின்று கேட்பார்களாம். மிகவும் பணம் படைத்த செல்வந்தர்களே பைபிளை வைத்திருந்தார்களாம். ஹென்றி அரசன் III (1538) காலத்தில் ஒரு வேதாகமத்தை வாங்க, ஒருவருட சம்பளம் தேவைப்பட்டதாம். இன்றைய நாட்களில் இலவசமாக வேதாகமம் கிடைக்கிறது. என்ன சிலாக்கியம் பெற்ற மக்கள் நாம்.

## வெளிஊழியங்களின் விடிவெள்ளி

1683-ம் ஆண்டு, ஜூலை 24-ம் தேதி ஜெர்மனி தேசத்திலுள்ள டிரஸ்டன் நகரில் வியாபாரியின் குடும்பத்தில் சீகன்பால்கு என்பவர் பிறந்தார். அவருடைய தாயார் இயேசுவை நேசித்த ஒரு அருமையான பெண்மணி. இவர் இளவயதிலேயே ஒரு அநாதையாக மாறினார். மரணப்படுக்கையில் இருந்த அவரது தாய், தனது பிள்ளைகள் அனைவரையும் தம்மருகே வர கூறினார். “என் அருமை மக்களே, உங்களுக்காக ஒரு அரிய பொக்கிஷத்தை வைத்துள்ளேன்” என்றவுடன் எங்கே என்று

கேட்டான் மூத்த மகன், "உள்ளேயிருக்கிற பெட்டியை கொண்டு வா" என்றார்கள் அந்த தாய். அதை ஆவலுடன் திறந்து பார்க்கையில், கிழிந்துபோன ஒரு வேதாகமம் இதில் காணப்பட்டது. இந்த வேதாகமத்தை என் கண்ணீரால் நனைத்திருக்கிறேன். இதிலே உங்களுக்கு எல்லா பொக்கிஷங்களும் மறைந்துள்ளது என்றார். "ஒரு அறிவுள்ள தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமம்". சீகன்பால்கு தனது அக்காவால் வளர்க்கப்பட்டார். தனது 16-வது வயதில் தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்தார். பரிசுத்த வாழ்க்கையை விரும்பின நண்பர்களுடன் பழகினார். ஒருநாள் ஒரு இன்னிசை கச்சேரிக்கு சென்று அதைக் குறித்து அகமகிழ்கையில், "அநேகர் பாவத்தில் வாழ்ந்துகொண்டு, இரட்சகராகிய இயேசுவை அறியாத நிலையில், இன்னிசையை நாம் எவ்விதமாக ரசிக்க முடியும்" என்றாராம் அவரது நண்பர். இந்த சவாலை ஏற்றுக்கொண்ட சீகன்பால்கு ஆரம்பத்தில் ஒரு சிறிய ஆலயத்தில் குருவாகப் பணிபுரிந்தார்.

"நற்செய்தியை அறியாதவர்களுக்கு அதை அறிவிக்க ஒரு சுவிசேஷகர் தேவை. அயல்நாட்டில் ஒரு ஆத்துமாவை ஆதாயம் செய்தால் ஐரோப்பாவில் 100 பேர்களை ஆதாயம் செய்வதற்குச் சமம். ஏனெனில் ஐரோப்பாவில் ஆத்தும ஆதாயம் செய்ய அநேக வழிமுறைகள் உள்ளன" என்றார் அவரது நண்பர். 1705 நவம்பர் 29 நாள், ஞானமுள்ள இராணி என்ற கப்பலில் ஏறி 7 மாதங்கள் கடல் பிரயாணம் செய்து, 1706 ஜூலை 6-ம்தேதி தமிழ்நாட்டிலுள்ள நாகப்பட்டிணம், தரங்கம்பாடியில் வந்து 1706 செப்டம்பர் 3-ம் தேதி தமிழ் மொழியை மணலில் எழுதிக் கற்று 8 மாதங்களில் தமிழில் நன்றாக பேசக்கற்றுக்கொண்டார். 2 வருடங்கள் 20,000 வார்த்தைகள் கொண்ட தமிழ் அகராதியையும், 4 வருடத்தில் 40,000 வார்த்தைகள் கொண்ட அகராதியையும் உருவாக்கினார்.

1711 மார்ச் 11-ம் நாள், புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து முடித்தார். இன்று இந்திய பொக்கிஷங்களிலே, மிகவும் விலையேறப்பெற்ற புதிய ஏற்பாட்டை மொழிப்பெயர்த்தேன் என்றார். பழைய ஏற்பாட்டில் ரூத் வரைக்கும் மொழிபெயர்த்தார். இதுதான் இந்தியாவிலே முதலாவதாக அச்சடிக்கப்பட்ட ஒப்பற்ற நூல். கடவுளுக்கே மகிமை உண்டாவதாக. நம் கையிலுள்ள பைபிள் மிகவும் விலையேறப்பெற்றது. ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு அயல் நாட்டைச் சேர்ந்த ஆத்ம பாரம் கொண்டவரால் ஆரம்பத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. நாம் இதை வாசிக்கத் தவறினால், மிகப்பெரிய ஆசீர்வாதத்தை இழந்தவர்களாக காணப்படுவோம்.

பரிசுத்தாவியின் அபிஷேக பெற குடும்ப ஆலோசனைகளுக்கு 94434 74921 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

## Bible and Guinness Record

Bible is the world's best-selling, most read and most widely distributed book.

Bible is also the most translated book in the world. As of October 2018 the full Bible has been translated into 683 languages, the New Testament has been translated into an additional 1,534 languages and Bible portions or stories into 1,133 other languages. Thus atleast some portion of the Bible has been translated into 3,350 languages.

## ஒரு வேதாகமத்தின் டைரிக்குறிப்பிலிருந்து... !




**ஜனவரி**: அநேக வேலைகள் நிறைந்த நெருக்கமான நேரம் எனக்கு. குடும்பத்தில் பலர் என்னை இந்த வருடத்தில் வாசித்து முடிக்க முடிவு செய்து, முதல் இருவாரங்கள் என்னை உபயோகித்தனர். ஆனால் இப்பொதோ என்னை முற்றிலும் மறந்துவிட்டனர்.

**பிப்ரவரி** : கடந்த வாரம் என் உரிமையாளர், சில மணித்துளிகள் என்னை உபயோகித்தார். எதற்குத் தெரியுமா இன்னொருவரோடு அவருக்கு ஏற்பட்ட வாக்குவாதத்தில் இவருக்குச் சாதகமாக சில வசனங்களைக் கண்டுபிடிக்க.

**மார்ச்** : தாத்தா, வீட்டிற்கு வந்திருக்கிறார். சுமார் ஒரு மணிநேரம் என்னை தன் மடிமேல் வைத்து 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தை வாசித்தார்.

**ஏப்ரல்** : இன்று என்னைப் பெட்டி ஒன்றில் போட்டு மூடிவிட்டார்கள். விடுமுறைக்காக வேறிடம் செல்கிறார்கள் போலும், வீட்டிலேயே என்னை விட்டுச் சென்றால் நலமாயிருக்கும். ஒரு மாத காலமும் பெட்டிக்குள் தானே இருக்கப்போறேன்.

**மே** : இன்னும் நான் பெட்டிக்குள் தான்.

**ஜூன்** ; வீடு திரும்பியாகிவிட்டது. என் இடத்தில் அமர்ந்திருக்கிறேன். தற்போது என்னோடு சிலர் சேர்க்கப்பட்டுள்ளனர். யார் தெரியுமா? மூன்று கதைப் புத்தகங்களும் நான்கு நகைச்சுவை ஏடுகளும் என்மேறி ஏறி உட்கார்ந்துள்ளனர்.

**ஜூலை** : இம்மாதத்தில் ஒரே ஒருநாள் மட்டும் நான் அதிகமாய் உபயோகிக்கப்பட்டேன். காரணம் என் உரிமையாளர் ஏதோ ஓரிடத்தில் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதால்.

**ஆகஸ்ட்** : என் பக்கங்களில் சில பச்சை நிறம் சாயம் படிந்துள்ளது. அழகிய பூக்கள் என் பக்கங்களுக்கிடையில் வைத்து பராமரிக்கப்பட்டதன் விளைவு.

**செப்டம்பர்** : துண்டு பேப்பர்களை செருகி வைக்கும் ஒரு குப்பைப் புத்தகமாக நான் காட்சியளிக்கிறேன். அநேக செய்தித் தாள்களின் பகுதிகள் எனக்குள் அடக்கப்பட்டுள்ளன.

**அக்டோபர்** : குடும்பத்தில் ஒருவர் மிகவும் வியாதிப்பட்டிருந்தால் இன்று என்னை சிறிது உபயோகித்தார்கள். நன்றாகத் துடைக்கப்பட்டு மேஜையின் நடுவில் வைக்கப்பட்டுள்ளேன்.

**நவம்பர்** : யாரும் வியாதிப்படாததால், என் பழைய இடத்திற்கே போய்விட்டேன்.

**டிசம்பர்** : கிறிஸ்மஸ்காக ஆயத்தப்படுகிறார்கள். நிச்சயம் வண்ணப் பேப்பர்களுக்கடியில் தான் என் இடம். இவ்வருடம் அவ்வளவாய் தான் உபயோகிக்கப்படவில்லை.

**உங்கள் வேதாகமத்தின் நிலை எப்படி?**

நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய்,
ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன் (ஓசியா 4:6).



சங்கீத புஸ்தகம்

# ஆரோகண சங்கீதங்கள்

**Rev. Dr. சாமுவேல் ராஜ் R.**

All India National Director, Global University

கடந்த இதழில் சங்கீதப் புத்தகத்தின் முன்னுரையாகச் சில பகுதிகளைப் பார்த்தோம். இவ்விதழில் **"ஆரோகண சங்கீதங்கள்"** குறித்த விபரங்களைச் சுருக்கமாய் காண்போம்.

120 முதல் 134 வரையுள்ள பதினைந்து சங்கீதங்கள் **"ஆரோகண சங்கீதம்"** என்னும் தலைப்பைக் கொண்டுள்ளன. இவையனைத்தும் (புண்ணிய) யாத்திரைப் பாடல்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. **"ஆரோகணம்"** என்பதற்கு "மேலே ஏறிச்செல்லுதல்" (ஏணிப்படிகளில் ஏறுவது போன்று) என்று பொருள்.

இந்த பதினைந்து சங்கீதங்களில் 122,124,131,134 ஆகியவற்றை தாவீது எழுதியுள்ளான். சாலொமோன் 127-ம் சங்கீதத்தின் ஆசிரியர். மற்ற பத்து ஆரோகண சங்கீதங்களை எழுதியது யார் என தெரியவில்லை. எசேக்கியா ராஜா இவற்றை எழுதினான் எனக் கூறுவாரும் உண்டு.

இஸ்ரவேலர் தங்களது பிரதானப் பண்டிகைகளான **பஸ்கா பண்டிகை. பெந்தெகொஸ்தே பண்டிகை, கூடாரப் பண்டிகை** ஆகிய மூன்று பண்டிகை நாட்களில் குடும்பமாகவும், கூடுமானால் எல்லா ஆண்களும் யாத்திரையாக எருசலேமுக்குச் சென்று கர்த்தருக்கு ஆராதனை செய்வர். லூக்கா 2:41-52-ல் இதனை காண்கிறோம். அப்படி யாத்திரை செய்யும்போது இந்த ஆரோகண சங்கீதங்களைப் பாடிச் செல்வது வழக்கம். இப்பாடல்கள், கர்த்தர் இஸ்ரவேல் தேசத்துக்குச் செய்த நன்மைகளை நினைவுகூற உதவின.

## கருப்பொருள்

மூன்று பிரிவுகளாக இந்த பதினைந்து சங்கீதங்களைப் பிரித்து பொருள் காணலாம்.

**பிரிவு-1 :** 120, 123,126,129,132 ஆகிய சங்கீதங்கள் துன்பம், பாடு, உபத்திரவம், நிந்தை, அடிமைத்தனம் ஆகியவை குறித்துச் சொல்கின்றன. இவை பெரும்பாலும், இஸ்ரவேல் ஜனங்கள் தங்களது சத்துருக்களின் கரங்களில் பட்ட பாடுகளைப் பின்னணியாக கொண்டவை ஆகும். பாடுகளின் மத்தியில் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் விண்ணப்பத்தை இவற்றில் காணலாம். பக்தர்கள் பட்ட பாடுகளைக் கவனியுங்கள் :

"....நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம். சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும்," அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும் எங்கள் ஆத்துமா மிகவும் நிறைந்திருக்கிறது (சங்.123:3.4) என்பவை சிறையிருப்பிலும், அந்நியர் கையில் அடிமைகளாயிருந்த காலத்தில் அவர்கள் அனுபவித்த **நிந்தனை இகழ்ச்சி,** குறித்துக் கூறுகிறது.

"கர்த்தர் நமது பக்கத்திலிராவிட்டால்..... நம்மை உயிரோடு விழுங்கியிருப்பார்கள்... நம்மை அவர்களுடைய பற்களுக்கு இரையாக ஒப்புக்கொடாதிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கண்ணி தெறித்து, நாம் தப்பினோம்; கர்த்தாவே ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்" (சங்.124:1-5; 130:1)

என்ற வசனங்கள், புறஜாதியார் நடுவில் இஸ்ரவேலர் அனுபவித்த **மரண பயங்களை** நமக்குத் தெரிவிக்கின்றன.

"உழுகிறவர்கள் என் முதுகின் மேல் உழுது, தங்கள் படைச்சால்களை நீளமாக்கினார்கள்" (சங்.129:2) என்ற வசனம் இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் பட்டத் **துன்பங்களை** நமக்குத் விவரித்துச் சொல்கிறது.

**பிரிவு-2 :** 121,124,127,130, 133 ஆகியவை. கர்த்தரது பெரிதான இரக்கம் குறித்தும், நமது ஜனங்களை அவர் விடுவிக்கும் இரட்சிப்பைப் பற்றியும் தெரிவிக்கின்றன. பக்தனின் நம்பிக்கை இப்பாடல்களில் வெளிப்படுகின்றன. விடுவிக்கும் கர்த்தரது இரக்கமும் வல்லமையும் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. பாடுகளுக்கு பின்பு கர்த்தரிடத்திலிருந்து ஒத்தாசை வரும் (சங்.121:2). கர்த்தர் பக்கத்திலிருப்பார் (சங்.124:1,2). கர்த்தர் வீட்டைக் கட்டுவார் (சங்.127:1). கர்த்தரிடத்தில் மன்னிப்பு உண்டு (சங்.130:4). கர்த்தர் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுவார் (சங்.133:3) என்ற நம்பிக்கையின் வாக்குத்தத்தங்களை இந்த இரண்டாவது பிரிவில் காண்கிறோம்.

**பிரிவு-3 :** 122, 125, 128,131, 134 ஆகிய சங்கீதங்கள் எருசலேமைக் குறித்தும், சீயோனைப் பற்றியும் சொல்கின்றன. சீயோனின் மேன்மைக் குறித்தும், எருசலேமின் ஆசீர்வாதங்கள் பற்றியும் இவை வெளிப்படுத்துகின்றன. எருசலேமில் இருக்கும் பிரசன்னம் குறித்தும், சீயோனின் மாட்சிமை பற்றியும் இந்த சங்கீதங்கள் கூறுகின்றன.

தங்களது நிந்தனை, இகழ்ச்சி, மரண பயம், கண்ணிகள், அடிமைத்தனம், துன்பம் ஆகியவற்றைத் திரும்பிப் பார்க்கும்போது, எருசலேமில் வாசம் பண்ணுதல் எத்தனை ஆசீர்வாதமானது என்ற கருத்தை இந்த மூன்றாவது பிரிவிலுள்ள ஐந்து சங்கீதங்களும் நமக்குத் தெளிவாய் சொல்கின்றன. எத்தனைதான் பாடுகள் பட்டாலும், இன்று இஸ்ரவேலர் எருசலேமில் தங்கி தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பது தேவனுடைய கிருபையே! இது விசுவாசிகளின் வாழ்க்கையிலும் எவ்வளவு உண்மை! சீயோனை நாடி நமது பாடுகளில் முன் செல்வோமாக!!

மோசேயின் தலைமையின் கீழ் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், நாற்பது நீண்ட ஆண்டு காலங்கள் நாடோடி ஜனங்களாகவே ஓடி அலைந்து, கானான் தேசத்தைச் சென்று சேர்ந்தனர்.

அவர்கள் வருடந்தோறும் மூன்றுமுறை எருசலேம் செல்ல வேண்டும் என்பது தேவனுடைய நியமம். விசுவாசிகளாகிய நாமும் இன்று யாத்திரை செய்யும் நாடோடிப் பரதேசிகளே! இதைத்தான் தாவீதும், பவுலும், பேதுருவும், எபிரெய நிருப ஆசிரியரும் நமக்கு எடுத்துரைக்கின்றனர்.

1 நாளா.29:15-ல் "உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாய் இருக்கின்றோம்".

சங்.84:5-7-ல் "அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின் மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள் ".

சங்.119:19,54-ல் "பூமியிலே நான் பரதேசி, உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்". நான் பரதேசியாய் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்கு கீதங்களாயின".

எபி.11:8-10,13-16-ல் "ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியாய் சஞ்சரித்து.... கூடாரங்களிலே குடியிருந்தான், ஏனெனில் தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்".

"......இவர்களெல்லாரும் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு.... சுயதேசத்தை நாடிப் போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். 1 பேதுரு 1:1,2; 2:11-ல் .....பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது, அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறீர்கள்...."

**மேற்கண்ட வசனங்களெல்லாம் நமக்கு அறிவுறுத்துவது என்ன?**

நம்முடைய குடியிருப்பு பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து எனும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலி.3:20) என்பது தானே!

ஆரோகண சங்கீதங்களில் மூன்றாவது பிரிவு எருசலேம், சீயோன் என்ற மேலுள்ள வாஞ்சையை அழுத்திச் சொல்லுகிறது. பரதேசிகளாய் தங்கின இஸ்ரவேலர் வருடம் மும்முறை எருசலேமுக்கு பயணமாய் சென்றனர். அப்படியே நாமும், "இவ்வுலக வாழ்வே நிரந்தரம்" என இருந்துவிடாமல், எப்போதும் பரம சீயோனின் வாஞ்சையால் நிரம்பி, அனுதினமும் ஆண்டவருடைய சமுகத்தை நாட வேண்டும்.

நாம் செய்யும் வாழ்க்கை என்னும் பயணம், தற்காலிகமானது; இனிவரும் சீயோன் தான் நிரந்தரம் என்ற சிந்தையுடன் வித்தியாசமாய் நாம் வாழ்ந்து காட்ட வேண்டும்.

## ஆரோகண சங்கீதங்கள் நமக்குக் கற்றுத்தரும் ஆவிக்குரிய சத்தியங்கள்

துன்பங்களும், பிரச்சனைகளும், நெருக்கங்களும், இக்கட்டுகளும், கட்டுகளும், காவல்களும் வீழ்ச்சியுற்ற இவ்வுலக வாழ்க்கையில் தவிர்க்க முடியாதவையே. நமது சத்துருவாகிய பிசாசானவனும், அவனால் பயன்படுத்தப்படும் மனிதர்களும் இவற்றை நமக்குச் செய்வதில் கருத்தாயிருக்கின்றனர். எனினும், துன்பத்திலிருந்து நம்மை விடுவிக்க வல்லமையுள்ள கிருபையும் ஞானமும் உள்ள தேவனை நோக்கிக் கூப்பிடும்போது நிச்சயமாய் நமக்கு விடுதலை கிடைக்கும்.

விடுதலையும் இரட்சிப்பும் நமக்கு வரும்போது நமது வாஞ்சையும் விருப்பமும் எருசலேமின் அனுபவங்களாக இருக்க வேண்டும். சீயோனின் சிந்தனையாக இருக்க வேண்டும். இயேசு நமக்காக மரித்தார். மறுபடியும் வருவார், நமது வாழ்வும் இவ்வுலகில் நிலையானது அல்ல என்பதை மனதிற்கொண்டு, வரப்போகிறதை நாடி தேட வேண்டும். அப்படியானால், எப்போதோ ஒருமுறை வசதிப்படும்போது அல்லது நமக்கு மனமிருக்கும் நேரத்தில் மட்டும் கர்த்தரை தேடினால் போதாது. "இவ்வுலகமும் தேவை, அவ்வுலகமும் தேவை என்று இருநிலைக் கொள்கை கூடாது. இவ்வுலகம் கொடுக்கும் அனைத்தையும் அனுபவிக்க வேண்டும். மறுவுலக வாழ்வின் நிரந்தரமும் தேவை என வாழ்தல் மிகவும் ஆபத்தானதாகும்".

நாம் சீயோனுக்கு நேராய் பயணிக்கும் புண்ணிய யாத்திரைக்காரர் எனும் உறுதிப்பாட்டுடன், இவ்வுலக வாழ்க்கையில் பற்றற்ற வாழ்க்கை வாழ வேண்டும். அப்படி வாழும்போது ....பரம எருசலேமின் சமாதானத்தை இவ்வுலகிலும் அனுபவிக்க முடியும்; நம்முடைய வீட்டில் சமாதானமும் சுகமும் இருக்கும் (சங்.122:6,7). கர்த்தர் இவ்வித ஜனங்களின் அரணும் கோட்டையுமாயிருப்பார் (சங்.125:2). வாஞ்சையாய் கர்த்தரை நம்பி அவர் வழிகளில் நடப்பவனுடைய மனைவி, பிள்ளைகள் அனைவரும் ஆசீர்வாதமாயிருப்பர். அவன் வேலையும் ஆசீர்வதிக்கப்படும். கைகளின் கிரியைகள் ஆசீர்வதிக்கப்படும் (சங்.128:2,3). இவ்வுலகிலிருந்து சீயோனை நோக்கிப் பார்ப்போரை வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பார் (சங்.134:3).

அடுத்த இதழில் மூன்று பிரிவுகளிலான பதினைந்து சங்கீதங்களையும் இன்னும் சற்று விரிவாகக் காண்போம்!.



# எழுப்புதல் வீரர் ஜான் வெஸ்லி அவர்கள் கூறிய சில அறிவுரைகள்

1. ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாயிரு, ஒருபோதும் சும்மாயிராதே. உன் கரங்கள் எப்போதும் ஏதாவது ஒரு பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருக்கட்டும். காலத்தை வீணாக்காதே. தேவையான இடத்தில் அவசியமான அளவு நேரத்தைவிட எவ்விடத்திலும் கூடுதலான நேரத்தை செலவிடாதே.
2. மிகவும் விழிப்புள்ளவனாயிரு. "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்பதே உன் வாழ்வின் சட்டவாக்கியமாய் இருக்கட்டும். எல்லா வெதுவெதுப்பையும்,கேலி பேசுதலையும், முட்டாள்தனமான பேச்சையும் உன்னை விட்டு அகற்று.
3. எதிர்பாலரோடு உரையாடுகையில் உன் உரையாடல் மிகவும் சுருக்கமானதாகவும், குறுகிய நேரமுடையதாகவும் இருக்கட்டும். முக்கியமாக இளம் பெண்களுடன் நீ சம்பாஷிக்கையில் மிகவும் ஞானத்தோடு நடந்துகொள்.
4. கிறிஸ்துவுக்குள்ளான உன் சகோதரர்களிடம் ஆலோசனை கேட்காமல் உன் திருமண காரியத்தில் எந்த முடிவும் எடுத்துவிடாதே.
5. உன் சொந்தக் கண்கள் காணாதிருக்க, யாரைக் குறித்தும் பேசப்படும் தீமையானவற்றை ஒருபோதும் நம்பாதே. எல்லாவற்றையும் அடிப்படையிலிருந்து சோதித்துப் பார்.
6. எந்த மனிதனைக் குறித்தும் தீமையானதைப் பேசாதிரு. உன் வார்த்தைகள் கேன்சரைப் போல அரித்துப்போடும் என்பதை நினைவில் வைத்துக்கொள். சம்பந்தப்பட்ட ஆளைச் சந்திக்கும் வரை உன் எண்ணங்களை உனக்குள்ளாக அடக்கி வைத்துக்கொள்.
7. யாரிடமாவது தவறைக் கண்டால் உடனடியாக நேருக்கு நேர் சுட்டிக்காட்டு, உன் மனதிலிருந்து பகை என்னும் நெருப்பை மிகச் சீக்கிரம் எடுத்துப் போடு.
8. பாவத்தைத் தவிர வேறு எதற்கும் வெட்கப்படாதே.
9. அழியும் ஆத்துமாக்களைக் காப்பதே உன் தலையாய கடமை. எனவே இதற்காக நீ செலவு செய்வதுடன் செலவு செய்யப்படு. எத்தனை ஆத்துமாக்களை மீட்க முடியுமோ, அத்தனை பேரையும் மீட்டு அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தி, உன் முழு பெலத்தோடும் அவர்களைப் பரிசுத்தத்தில் ஊன்றக்கட்டு.
10. எல்லாவற்றையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்; எல்லாவற்றிலும் ஒழுங்கைக் கடைப்பிடி. அவைகளை தேவ கோபாக்கினைக்கும் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பயந்து அல்ல, மனசாட்சியினிமித்தம் பற்றிக்கொள்.

## வெளிச்சம் உதித்தது

ஏசாயா உரைத்த அவ்வொளி
கடலோரம் உலாவிட....
தோல்வியை பார்த்திருந்த - பேதுருவை
மீன்களை காணசெய்தது - (மத்.4:15,16)

இருளிலே பிரகாசிப்பிக்கும்
இவ்வொளி.... பத்முவிலே....
பரலோகை காட்டியது
முடிவுவரை வழிகாட்டியது - (யோ.1:5)

சடிதியாய் ஓர் ஒளி
சாலையில் சவுலை சந்திக்க
சீஷரை கொலைசெய்ய சீறியவனை
சீஷனாய் மாற்றியது - (அப்.9:3)

உனக்குள்ளே எழும்பும்
உன் சுகவாழ்வும் துளிர்க்கும்
விடியற்கால வெளுப்பை போல
உன் வெளிச்சம் உதிக்கும் - (ஏசா.58:8)

ஆம் இயேசு நமக்குள்ளே உதிக்கும்போது நம்மையே மாற்றுவார்

**சகோதரி. சீமா லூக்காஸ்,** மதுரை.



தமிழ் பிரதேச மிஷனரி இயக்கம்

# இயேசுவை அறி - இயேசுவை அறிவி

Rev. K. ஆனந்தன் அலெக்சாண்டர்

Regional Missions Director, South Region

**"ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும்". மத்தேயு 24:14**

உலக இரட்சகர் இயேசுவின் இன்ப நாமத்தில் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். தேவன் நமது தமிழ் பிரதேசத்தில் தந்துள்ள மிஷன் இயக்கத்திற்காக ஸ்தோத்திரம். தரிசனம் தந்தவர், திட்டங்களை தந்தவர் அதை தீவிரமாய் நிறைவேற்றி முடிக்கவும், அவர் இதயம் பூரிக்கவும் நம் தேசத்தில் கிராமங்கள், பட்டணங்கள்தோறும் சபைகள் மலரவும் கிருபை தருவாராக!.

கிறிஸ்துவை அறிந்த ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தாங்கள் அறிந்த கிறிஸ்துவை அறியாத யாவருக்கும் அறிவிப்பது மிகவும் அவசியம். அப்போஸ்தலர் 9:17-22ல் சவுலை குறித்து பார்க்கிறோம். சவுல் கிறிஸ்துவை அறிந்தவுடன் தாமதமில்லாமல், தயக்கமில்லாமல், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், இவரே கிறிஸ்துவென்றும் திருஷ்டாந்தப்படுத்தினான் (அப்போஸ்தலர் 9 :20,22).

அன்பு தேவ ஊழியரே!, என் அருமை தேவ சங்க சபை மக்களே! கிறிஸ்துவை உண்மையாய் அறிந்திருந்தால் நாம் நிச்சயமாக கிறிஸ்துவை அறிவிக்காமல் இருக்க முடியாது.

பரந்துவிரிந்து கிடக்கும் பாரத தேசத்தில், 136 கோடி ஜனம், 4000-க்கும் அதிகமான இனமக்கள், பலமொழி, பல கலாச்சாரம் நிறைந்த இந்திய தேசத்தில் இன்னும் இயேசுவை அறியாமல் கோடான கோடி ஜனங்கள், இனங்கள் உண்டே. இந்த ஜனங்களுக்கு சுவிசேஷம் (இயேசுவை) அறிவிப்பது யார்? இயேசுவை அறிந்த நாம்தானே. இருளில் நடக்கும் ஜனங்களுக்கு நற்செய்தி சொல்லாவிட்டால் வேதம் நம்மை எச்சரிக்கிறது (1கொரிந்தியர் 9:16; ரோமர் 1:18; 1இராஜாக்கள் 7:9; எசேக்கியேல் 3:17,18).

இயேசுவை அறிந்து, நன்மை பெற்று, ஆசீர்வாதம் அனுபவிக்கும் நாம், அறிந்த இயேசுவை அறிவிக்காமல் இருக்கலாமா? இன்றே இயேசுவை அறிவிக்க ஆயத்தப்படுவோம். இயேசுவின் கட்டளை, ஆவல் என்ன? (மத்தேயு 28:19,20; மாற்கு 16:15), எல்லோருக்கும் நற்செய்தி அறிவிப்பது, எல்லோரும் இரட்சிப்படைவது. வேதாகமத்தில் இயேசுவை அறிந்தவுடன் சிலர் என்ன செய்தார்கள் என்பதைக் குறித்து பார்ப்போம்.

## 1. சமாரியா நாட்டாளாகிய ஒரு பெண் (யோவான் 4:5-42)

இவள் வாழ்க்கையில் சுத்தமில்லாதவள் (யோவான் 4:16-18), வார்த்தையில் உண்மையில்லாதவள், மறைந்து வாழ்ந்தவள், மற்றவர்கள் பார்வையில் அருவருக்கத்தக்கவள், வெறுக்கப்பட்டவள். ஆனால் இயேசுவோடு பேசி அவரை யார் என அறிந்தவுடன் தான் என்ன காரியமாய் வந்தாளோ அதை விட்டுவிட்டு

சொல்லவேண்டிய காரியம் எவ்வளவு முக்கியம் என்று அறிந்து உடனே ஊருக்குள் போய் இயேசுவை சொன்னாள் (யோவான் 4:25-30). கிறிஸ்துவை (மேசியாவை) ஜனங்கள் எதிர்பார்த்து இருந்தார்கள். இன்றும் நம் தேச மக்கள் மெய்யான தேவனை தேடி அலைகிறார்கள். அவர்களுக்கு இந்த பெண் சொன்னதைப் போல **வந்து பாருங்கள், நீங்கள் எதிர்பார்த்து இருக்கும் மெய் தேவன் இவரே** என்று சொல்லுவோம். யோவான் 4:39-40ன் படி அநேகர் இயேசுவின்மேல் விசுவாசம் வைப்பார்கள். நம் ஜனங்களுக்கு நாம் சொல்லாவிட்டால் வேறு யார் சொல்ல முடியும்.

## 2. பிசாசுகள் பிடித்த மனிதன் (லூக்கா 8:26-40, மாற்கு 5:2-21)

இவன் நெடுநாளாய் அநேக பிசாசுகளினால் கட்டப்பட்டிருந்தான். அவன் வஸ்திரம் தரியாதவன், வீட்டில் தங்காதவன், பிரேதக் கல்லறைகளில் தங்கினவன். சங்கிலி, விலங்குகளால் கட்ட முடியாதவன். ஒருவராலும் அடக்கக் கூடாதவன், எப்பொழுதும் கூக்குரலிட்டு, தன்னைக் காயப்படுத்தினவன் (லூக்கா 8:27; மாற்கு5:3,4). ஆனால் இயேசு அவனை சந்தித்து அவனுக்குள்ளிருந்த அநேகம் பிசாசுகள் நீங்கினவுடன் அவன் வஸ்திரம் தரித்து இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்திருந்தான் (லூக்கா 8:35). அவன் புத்தி தெளிந்திருப்பதை பார்த்த ஊரார் இயேசுவை தங்கள் எல்லைகளை விட்டு போகும்படி சொன்னார்கள். இயேசுவும் போனார் (லூக்கா 8:37). இன்றும் இயேசுவை ருசிபார்க்காத ஜனக்கூட்டம் இயேசு எங்களுக்கு வேண்டாம், அவர் அந்நிய நாட்டு கடவுள் என்று சொல்லி புறக்கணிக்கின்றனர். ஆனால் பிசாசு நீங்கின மனுஷன் தானும் இயேசுவோடு போக விரும்பிய போது அவனுக்கு அனுமதி கொடாமல், இயேசுவோ, அவனை நோக்கி: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்கு போய் கர்த்தர் உனக்கு இரங்கி உனக்கு செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி என்று சொன்னார் (மாற் 5:17-19).

அந்தப்படி அவன் போய் தெக்கப்போலி நாட்டில் பிரசித்தம்பண்ணினான் (மாற்கு 5:20). எந்த ஊர் மக்கள், இயேசுவை வேண்டாம் என்று வெறுத்தார்களோ, தள்ளினார்களோ அந்த ஊரார் இயேசுவை தேடி வந்தார்கள் (மாற்கு 5:21). இயேசுவை சந்தோஷமாய் ஏற்றார்கள் (லூக்கா 8:40). எனவே நமக்கு அவர் செய்தவைகளை நம் ஊராருக்கு, நம் தேச மக்களுக்கு சாட்சியாக அறிவிப்போம். நம் தேச மக்களும் இயேசுவை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்கள். அது நடக்கும் என விசுவாசிப்போம்.

## 3. எம்மாவு சீஷர்கள் (லூக்கா 24:13-35)

இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை அறிந்த மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாரிய மரியாளும், மற்ற ஸ்திரீகளுக்கும், சீஷர்களுக்கும், மற்ற எல்லாருக்கும் அறிவித்தார்கள் (லூக்கா 24:5-10). ஆனால் அவர்கள் அதை நம்பவில்லை (24:11). அதில் உள்ள இரண்டு பேர் எருசலேமை விட்டு எம்மாவுக்கு பேசி கொண்டே போகிறார்கள். இயேசு தாமே அவர்களுடன் சேர்ந்து நடந்து போனார். ஆனால் அவர்கள் அவரை அறியவில்லை. அவர்களது கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. இன்றும் அநேக ஊழியர்கள், விசுவாசிகளின் கண்கள் உலக ஆசையால் உலக மோகத்தால் இருளடைந்து தரிசனம் இல்லாமல் போய்விட்டது. சொல்ல வேண்டியதை சொல்லாமலே மடிந்து போகிறார்கள். ஆனால் இயேசுவோ அவர்களிடம் காரியம் என்ன என்று கேட்கிறார். அவர்கள் நடந்தவைகளைச் சொன்னர்கள்.

அந்த நேரம், அவர்கள் போக வேண்டிய கிராமம் வந்தது. அந்த சீஷர்கள் இயேசுவை அறியாதபடியால், இயேசுவை நோக்கி, சாயங்காலமாயிற்று பொழுது போயிற்று, எங்களுடனே தங்கியிரும் என்றார்கள். இயேசுவோ வீட்டிற்குள் போய் பந்தியில் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, பிட்டு கொடுத்தார். அப்பொழுது அந்த சீஷர்கள் கண்கள் திறக்கப்பட்டு இயேசுவை அறிந்தார்கள் (லூக்கா 24:28-31) இயேசுவும் அவ்விடம் விட்டு மறைந்து போனார்.

அன்பான தேவ ஊழியர்களே! அன்பு தேவபிள்ளைகளே! எந்த சீஷர்கள் இயேசுவை அறிவதற்கு முன்பு நேரம் ஆகிவிட்டது, பொழுது போய்விட்டது, தங்கும் என்றார்களோ, அதே சீஷர்கள் அந்நேரமே எழுந்திருந்து எருசலேமுக்கு திரும்பி போய் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியையும், தங்களுக்கு அவர் தரிசனம் கொடுத்ததையும் உடனே போய் சொன்னார்கள் (24:33-35). அப்படியானது இந்த நற்செய்தி எவ்வளவு முக்கியமானது. சத்தியமாகிய இயேசுவை அறிந்த நாம், இயேசுவை குறித்து அறியாத ஜனங்களுக்கு நற்செய்தியாகிய இயேசுவை சொல்ல, காலதாமதம் வேண்டாம் (யோவான் 14:6). சத்தியத்தை அடக்கி வைக்க வேண்டாம். கணக்கு கேட்கும் கர்த்தர் சத்தம் கேட்கிறது. சமயம் வாய்த்தாலும், வாய்க்கா விட்டாலும், சூழ்நிலை சாதகமாய் இல்லாமல் போனாலும், பல நெருக்கடி கண்முன் வந்தாலும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல திடன்கொண்டு (அப்.9:22) இயேசுவே தேவன் என்று தைரியமாய் சொல்லுவோம்.

**தேவன் பலன் தரும் நாள் வெகு சீக்கிரம்!.**
**பலன் பெற ஆயத்தப்படுவோம்!**
**அநேகரை ஆயத்தப்படுத்துவோம்!**
**கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!.**

## தமிழ் பிரதேச மிஷனரி இயக்க அறிக்கை

### மிஷன் பிரயாணங்கள்

செப்டம்பர் மாதம் 15ம் தேதி முதல் 21ம் தேதி வரை Rev. T.R. ஜான் வின்ஸ்லி, Rev. V. மனோஜ்குமார், Rev. S.G. பிரேம்குமார், Rev. M. ஸ்டீபன் பால் ஆகியோர் கொண்ட குழு மகாராஷ்ட்ராவில் உள்ள ரத்னகிரி மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு சென்று நமது தமிழ் பிரதேசத்திலிருந்து உதவி பெறுகிற மிஷனரிகளை சந்தித்து, மிஷனரி எழுப்புதல் கருத்தரங்கு மற்றும் பணித்தளங்களையும் சந்தித்து, சபைகளை உற்சாகப்படுத்தி வந்துள்ளனர். அங்குள்ள தலைவர்கள், மிஷன் பொறுப்பாளர்கள் இவ்வூழியங்களை சிறப்பான முறையில் ஒழுங்கு செய்தார்கள்.

### மிஷன் கன்வென்ஷன்கள்

ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் தஞ்சாவூர் தெற்கு, சாத்தூர், தாம்பரம் மேற்கு, பாண்டிச்சேரி, காஞ்சிபுரம், நாகர்கோவில், வேலூர், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, அம்பை, செங்கோட்டை, கடலூர், ராதாபுரம், திருச்சி ஆகிய மண்டலங்களில் மிஷன் கன்வென்ஷன்கள் சிறப்பாக நடைபெற்றது.

### ஜெப விண்ணப்பங்கள்

- வடமாநிலத்தில் மழையினால் பாதிக்கப்பட்டுள்ள நமது மிஷன் பணித்தளங்கள் சீக்கிரமாய் சீரமைக்கப்பட ஜெபிக்கவும்.
- நமது மிஷன் பணித்தளங்களில் ஊழியம் செய்கிறதான மிஷனரிகள்,

- ✦ புதிதாக பயிற்சி மிஷனரிகளாய் அனுப்பப்பட்டு சென்றுள்ள பிரஷாந்த் – மகாராஷ்ட்ரா, சாமுவேல் (ஏ) சரவணபெருமாள் – மேற்கு வங்காளம், எபினேசர் மற்றும் சிம்சோன் – கர்நாடகா, வின்சென்ட் ராஜ் – குஜராத், மேசியா இம்மானுவேல் – இஸ்லாமியர் ஊழியம். இவர்களின் சுகத்திற்காகவும், துரிதமாய் மொழிகளை கற்றுக்கொண்டு வல்லமையாய் ஊழியம் செய்யவும் ஜெபிக்கவும்.
- ✦ மிஷன் பணித்தளங்களில் சொந்தமாக இடம் வாங்கப்பட, ஆலயங்கள் கட்டப்பட உள்ள தடைகள் நீங்க ஜெபிக்கவும்.
- ✦ மிஷனரிகளாய் செல்ல அநேகர் தங்களை அர்ப்பணிக்க, மிஷன் பணித்தள தேவைகளுக்காக, திருச்சபைகள் உற்சாகமாய் கொடுத்து உதவ ஜெபிப்போம்.
- ✦ புதிய திட்டங்களையும், தரிசனங்களையும் தந்து மிஷனரிகளை கர்த்தர் தேசத்தின்

**பஸ்தூன் – இஸ்லாம் மக்களினத்திற்காக ஜெபியுங்கள்**



மக்கள் இனம் : பஸ்தூன், இஸ்லாம்

மொழி : உருது

மக்கள் தொகை : 11,41,100

கிறிஸ்தவர்கள் : 0.00%

அதிகம் வாழும் பகுதி : உத்திரபிரதேசம், மகாராஷ்ட்ரா, மேற்கு வங்காளம்

நம்பிக்கை : பஸ்தூன் வாழும் இஸ்லாமியர்களில் அதிகமானோர் சன்னி பிரிவை சேர்ந்தவர்கள். மிகவும் அதிகமானோர் ஏழ்மையான நிலையில் சுகாதாரமற்ற சூழலில் வாழ்கின்றனர். இஸ்லாம் மத கோட்பாடுகளில் உறுதியான நம்பிக்கை கொண்ட இவர்கள் 'பஸ்தூன் வாசி' என்கிறதான ஒன்பது மத சடங்காச்சாரங்களை தங்கள் வாழ்நாளில் நிறைவேற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

தத்தெடுத்துள்ள மண்டலம் : பாளையங்கோட்டை

## மிஷனரிகளின் பணித்தள சாட்சிகள்

**1. பாஸ்டர். C.தேவராஜ், ஜெகனாபாத், பீகார் :** எங்கள் சபைக்கு அருகாமையில் வசிக்கும் சகோதரி ஒருவருக்கு ஐந்து முறை கர்ப்பந்தரித்து, ஐந்து முறையும் 7-வது மாதத்தில் குழந்தை இறந்து பிறந்துள்ளது. மருத்துவர்களும் காரணம் தெரியாமல் திகைத்தனர். மிகவும் மனவேதனையில் காணப்பட்ட அக்குடும்பத்தினர் சபையின் மூலமாய் நடைபெறும் ஜெபக்குழுவிற்கு வர ஆரம்பித்தனர். தொடர்ந்து அந்த சகோதரிக்காய் ஜெபித்தோம். கர்த்தரின் பெரிதான கிருபையினால் கடந்த மாதம் தேவன் அவர்களுக்கு ஒரு அழகான பெண் குழந்தையை கொடுத்தார். சாபக்கட்டுகளை தேவன் உடைத்ததினிமித்தம் இன்று குடும்பமாய் கர்த்தரை ஆராதிக்கின்றனர்.

**இந்த மிஷனரியை தாங்கும் சபைகள் :** பாஸ்டர்.A. டேனியல், தாம்பரம் கிழக்கு

**2. பாஸ்டர். பிரவின், சேக்புரா, பீகார் :** கோத்ராதி என்ற பகுதியில் சனிக்கிழமைதோறும் துதி ஆராதனை ஒன்றை நடத்தி வருகிறோம். கடந்த நாட்களில் நடைபெற்ற ஆராதனையில் அப்பகுதியை சேர்ந்த காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் கலந்து கொண்டார். ஆராதனையின் முடிவில் அவரை சந்தித்தபோது அவர் குடும்ப பிரச்சனை மற்றும் சில நீதிமன்ற வழக்குகளினிமித்தம் மிகுந்த வேதனையுடன் உள்ளதாகவும் அதற்காக ஜெபிக்கும்படியாய் கேட்டுக்கொண்டார். அவரது குடும்பத்திற்காய் ஜெபித்தோம். சில நாட்களிலேயே தேவன் அவரது குடும்பத்தில் சமாதானத்தையும், நீதிமன்ற வழக்குகள் அனைத்திலுமிருந்து விடுதலையையும் கொடுத்தார். அவர் தொடர்ந்து சபை ஆராதனைக்கு வந்துகொண்டிருக்கிறார். ஞானஸ்நானம் பெற அர்ப்பணித்துள்ளார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**இந்த மிஷனரியை தாங்கும் சபை : பாஸ்டர்.** N. ஜான்சன், சென்னை வடக்கு

# மிஷனரி பிரயாணங்கள், மிஷன் கன்வென்ஷன்கள்

ரத்ன கிரி



குஜராத்



அம்பை



காஞ்சிபுரம்



நாகர்கோவில்



பாண்டிச்சேரி



தஞ்சாவூர்



செங்கோட்டை



தூத்துக்குடி




வேலூர்





# இன்றைய ஆபகூக் எங்கே?

Rev. R. தாசையா
தேனி மண்டல தலைமைப் போதகர்

ஆபகூக் சின்ன தீர்க்கதரிசிகளில் எட்டாவது தீர்க்கதரிசி, யூத இராஜாவாகிய யோசியாவின் காலத்தில் ஊழியம் செய்தவர். தேவ ஜனங்கள் தங்கள் பாவ செயல்களில் மூழ்கியிருந்தார்கள். புறஜாதி பாபிலோனியர், கல்தேயர்கள் தங்கள் பெலனையே கடவுளாக நம்பி யுத்தம் செய்த காலம். தங்கள் ஆயுதங்களை கடவுள் என்று வழிபட்ட காலம். தன்னைத் தானே பலமாக கொண்ட மனிதனோ, நாடோ, ஆட்சியோ, அதிகாரமோ நிச்சயமாய் நிலைநிற்பதில்லை. சுய பெலனும், பாவசெயலும் அழிவையே கொண்டுவரும். இல்லையேல் தேவனின் நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வரும்.

சுயத்தை நம்பிய புறஜாதிகளை தேவன் அப்படியே விட்டுவைக்கவில்லை. அவர்கள் தங்கள் சுயபெலனை நம்பி செய்த அத்தனை காரியத்திலும் நியாயத்தீர்ப்பை உண்டாக்கினார் (ஆபகூக் 2:5-10). தன்னைத்தானே சார்ந்துகொண்டு சாதிக்கும் பாபிலோன் அழியும் என்றும், தேவனை சார்ந்து கொள்ளும் நீதிமான் பிழைப்பான் (உயர்த்தப்படுவான்) என்பதே ஆபகூக் நம்பிக்கை. இந்த பொல்லாத உலகில் நாம் ஒவ்வொருவரும் நீதிமானாக வாழ்வதும், தேவனை பெலனாக எண்ணி சார்ந்து கொள்வதுமே முக்கியமானவை. நீதிமானுக்கு தேவன்தரும் வாக்குறுதி ஆபகூக் 1:5-ல் **நீங்கள் விசுவாசியாத ஒரு கிரியை உங்கள் நாட்களில் நடப்பிப்பேன்.** இது நிறைவேற ஆபகூக் செய்த காரியங்கள்.

**முதலாவது,**

ஆபகூக் 1:2-4-**கர்த்தாவே நான் எதுவரைக்கும் உம்மை நோக்கி கூப்பிடுவேன். நீர் கேளாமலிருக்கிறீரே! நான் எதுவரைக்கும் உம்மை நோக்கி கூப்பிடுவேன். நீர் இரட்சியாமலிருக்கிறீரே!.** இது ஜெபத்தை சார்ந்த ஒரு முயற்சி. சில நேரங்களில் ஜெபம் செய்து ஜெபத்தில் ஒன்றுமே நடக்காதது போல பலரின் வாழ்வை பார்க்கிறோம் (யோபு 15:4,16:17,21:13-சங்கீதம் 35:13). ஆனாலும், நமது தொடர்ச்சியான ஜெபமே தேவன் நமக்கு வாக்குபண்ணியவை நிறைவேறக் காரணமாயிருக்கிறது. எனவே ஜெபத்தை நிறுத்தாதீர்கள்.

ஆபகூக் மூன்று காரியங்களுக்காக ஜெபிக்கிறதை பார்க்கிறோம்

- **2:14-ல் தேவமகிமை பூமியை, மனிதர்களை, சபையை நிரப்ப நாம் ஜெபிக்க வேண்டும்.** மகிமை என்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட அவரது மகத்துவ செயல்கள், இந்த காலம் கிறிஸ்தவம் நெருக்கப்படும் காலம், ஊழியம் நசுக்கப்படும் காலம், திட்டமிட்டு சபைகளை சீரழிக்கும் அந்நிய சக்திகள், அடியோடு அடங்கிப் போக நாம் தேவ மகிமையை காணும் வரை ஜெபிக்க வேண்டும் (யோ2:10; 9:12; 2 நாளா.7:1-3) தேவமகிமை வெளிப்பட்டால் ஆசாரியனும் பணிவான், ஆளுகை செய்கிறவர்கள், அடங்குவார்கள். தேவ ஜனங்களின் ஒழுங்கீனங்கள் மாறும், சபை மறுபடியும் ஆதி நிலைக்கு எழும்பும் (அப்.4:29-37).
- தேவ ஜனங்களின் வாழ்வில் **ஒரு உண்மையான மனந்திரும்புதல், ஓர் உயிர்மீட்சியான எழுப்புதல் உண்டாக** ஜெபித்தான்.

• தேவ ஜனங்களின் **கஷ்டங்கள் தீர்க்கப்பட, சுகமாக தேவ ஜனம் மாற,** தேவ இரக்கம் கிடைக்க தேவனின் பராக்கிரமத்தை எண்ணி ஜெபித்தான். எதிர்த்து வரும் எதிரிகளுக்கு தேவனே வழியை அடைக்கிறவராக மாறினார் (3:3,4; யாத்.14-ஆம் அதிகாரம்). நாமும் இப்படிப்பட்ட ஜெபத்தை செய்ய நம்மை ஆயத்தமாக்க வேண்டும்.

**இரண்டாவது,**

ஆபகூக் 2:1-3-**நான் காவலில் தரித்து அவர் எனக்கு என்ன சொல்லுவாரென்றும், அவர் என்னை கண்டிக்கும்போது நான் என்ன மறு உத்தரவு சொல்லுவேன் என்றும் கவனித்துப்பார்ப்பேன்.** தேவன் சொல்வதை நாம் கேட்கும்போது, தேவன் சொல்வதை ஏற்றுக்கொள்ளும் மனது, தேவன் சொல்லுவதோடு இணங்கிப்போகும் ஜீவியம் நமக்கு தேவைப்படுகிறது (யோ.2:5; ஆதி.12:1-4; 17:1-6; 21:12-14; 22:1-4). கீழ்படிவோரே மேலான நன்மைகளை பெற்றிருக்கிறார்கள். நம்மை உயர்த்தும் திட்டமும், நம்மை சரிப்படுத்தும் திட்டமும் தேவனிடம் மாத்திரமே உண்டு. வேதத்திற்கு மரியாதை கொடுங்கள். வேத வாக்கியங்களை மதித்து நடங்கள். வேத வார்த்தைகளை பின்பற்றுங்கள். வேத வார்த்தையை விசுவாசியுங்கள்.

**மூன்றாவது,**

ஆபகூக் 2:4-**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்.** நீதிமான் என்பது தேவனிடம் சரியான தொடர்பில் இருப்பவன் என்பதாகும். "A Righteous man is one who has right standing with God". நாம் தேவனிடம் பெற்றுக்கொள்வதற்காக, அவரை விசுவாசிக்காமல், அவரே தேவன் என்று விசுவாசித்து வாழப் பழகவேண்டும் (ரோமர் 1:17; கலா.3:11; எபிரெயர் 10:38). விசுவாச தந்தை என்று அழைக்கப்பட்ட **மார்டீன் லூத்தர்** இந்த சட்ட வசனத்தை கையில் எடுத்தார். மிகப்பெரிய புராட்டஸ்டண்ட சபையை உருவாக்கினார்.

நாம் வாழ்கிற காலம் விசுவாசத்துக்கு துரோகம் ஏற்படும் காலம் (2 தெச.2:3). மனுஷகுமாரன் வரும் நாட்களில் விசுவாசத்தைக் காண முடியுமோ என்கிற கேள்வி இயேசுவின் காலத்திலேயே கேட்கப்பட்டது (லூக்கா 18:8). ஏற்கனவே ஒரு காலத்தில் விசுவாசத்தோடு வாழ்ந்தவர்கள் இந்த நவீன காலத்தில் அந்த விசுவாசத்தில் பெலவீனராகி விசுவாசம் என்கிற கப்பலை சேதப்படுத்திவிட்டார்கள் (1 தீமோ.1:19). விசுவாசத்தை மறுதலிக்கும் ஒரு கூட்டம் எழும்புகிறது (1 தீமோ.6:21). விசுவாசத்தை கவிழ்த்துப்போட்டவர்கள் உண்டு. கவனமாயிருங்கள் (2 தீமோ.2:18). நவீன உபதேசங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்! Internet, Youtube, Facebook, Whatsapp-ல் வரும் துர் உபதேசங்களை புறம்பே தள்ளுங்கள். விசுவாசத்தை திசை திருப்பும் கள்ள போதகர்கள், கள்ள தீர்க்கதரிசிகள், கள்ள உபதேசங்களுக்கு விலகி விசுவாசத்தை தொடங்கின அவரிடமே கொண்டு விட்டுவிட ஓடிக்கொண்டே இருங்கள் (எபி.10:22,29; 11:6; 12:1;யூதா 3).

**தேவன் தேடுகின்ற ஆபகூக்காய் வாழுங்கள். குடும்பத்திலே, சபையிலே, தேசத்திலே தேவன் விரும்பும் மறுமலர்ச்சியை உண்டாக்குங்கள்.**

---


## மிஷனரிகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசு!

**உங்கள் சபைகளில் சிறப்பு காணிக்கைகளைக் கொடுத்து உங்கள் கிறிஸ்துமஸ் புதுவருட மகிழ்ச்சியில் நமது மிஷனரிகளை நினைவுகூருங்கள்!**

## 10-வது மாநில ஆண்கள் முகாம் அறிக்கை 2019

கர்த்தருடைய பெரிதான கிருபையால் அக்டோபர் மாதம் 1 மற்றும் 2-ம் தேதிகளில் நடைபெற்ற நமது பிரதேச 10வது ஆண்டு ஆண்கள் முகாம் வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. சுமார் 3000 பேர் பங்கு பெற்றனர். அநேகர் தங்கள் வாழ்வை தேவனுக்கு அர்ப்பணித்தனர். சிலர் கண்ணீரோடு மனந்திரும்பினர். சகல நிகழ்ச்சிகளும் ஆசீர்வாதமாக அமைந்தது. **Eva.பிரடி ஜோசப்**, **Rev.Dr.சாமுவேல்ராஜ்**, **Rev.T.C.நாதன்** தேவ செய்தியளித்தார்கள். **Rev.ஞான சேகரன்** அவர்கள் தலைமையில் பாடல் குழுவினர் சிறப்பாக பாடல் ஆராதனையை நடத்தினார்கள்.

பிரதேச ஆண்கள் ஐக்கிய பிராந்திய மற்றும் மண்டல பொறுப்பாளர்கள் தங்கள் முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் கொடுத்தனர்.

பிரதேச ஆண்கள் முகாம் வெகு சிறப்பாக நடைபெற உதவியாக இருந்த பிரதேச நிர்வாக குழுவிற்கும், பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களுக்கும், எல்லா மண்டல தலைமைப் போதகர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பிரதேச ஆண்கள் ஐக்கிய தலைவரான **Rev.Dr.ஆலன் பிராஸ்பர்** மற்றும் பொருளாளரான **Rev.N.ஜான்சன்** அவர்களும் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். நிகழ்ச்சியின் புகைப்படங்களை பின் அட்டையில் காணலாம்.

**Rev.J. Samuel Jebaraj,** செயலாளர், பிரதேச ஆண்கள் ஐக்கியம்

---

## வாலிபர் உபவாச ஜெபம்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் தமிழ் பிரதேச ஊழியர்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். 2019 ஆண்டு அக்டோபர் 7,8 ஆகிய தேதிகளில் மத்திய வாலிபர் உபவாச ஜெப முகாம் நடைபெற தேவன் கிருபை செய்தார்.

**Bro.சுரேஷ்பாபு** (கேரளா) அவர்கள் விசுவாசத்தின் படிகள், பரிசுத்த ஆவிக்குள் ஜெபித்தல் போன்ற சத்தியங்களை மையமாக வைத்து தேவ செய்தியளித்தார்கள். இதில் பங்குபெற்ற வாலிபர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஆவியில் எழுப்புதலை தந்தது. மத்திய, மண்டல வாலிபர் ஐக்கிய தலைவர்கள் வாலிபர்களை ஆராதனைகளிலும் ஜெபத்திலும் நடத்தினார்கள். அம்பத்தூர் மண்டல தலைமை போதகர் **Rev.B.சாமுவேல்** அவர்களும், நாகர்கோவில் மண்டல தலைமை போதகர் **Rev.S.கிறிஸ்டோபர்சிங்** அவர்களும் ஜெபத்தில் பங்கெடுத்து வாலிபர்களுக்காக ஆலோசனை கூறி ஜெபித்தார்கள்.

ஜெபத்தில் சுமார் 750 வாலிபர்கள் பங்குபெற்றனர். 85 வாலிபர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள தங்களை அர்ப்பணித்தனர். அநேக வாலிபர்கள் ஆவியில் உயிர் மீட்சியடைந்தனர். தேவனுக்கே மகிமை.

---

## தமிழ்நாடு வேதாகமக் கல்லூரி நடத்திய Kids Union 2019

மதுரையிலுள்ள நம்முடைய AG தமிழ்நாடு வேதாகம கல்லூரியின் சார்பில் கடந்த 24.08.2019 (சனிக்கிழமை) அன்று "நீங்கள் விசேஷமானவர்கள்" என்ற கருப்பொருளை மையமாக கொண்டு சிறுவர் சங்கமம்'19 மிக சிறப்பாக நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக **பாஸ்டர். பெவிஸ்டன்** (பரமன்குறிச்சி) அவர்கள் பங்கு பெற்று சிறுவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். சுற்றுவட்டாரத்திலுள்ள பல பகுதிகளில் நமது வேதாகம கல்லூரி மாணவர்கள் சிறுவர்களிடையே ஊழியம் செய்து திரளான பிள்ளைகளை அழைத்து வந்திருந்தனர். வேதாகம கல்லூரியின் முதல்வர் **Rev.D.எட்வர்ட் ஜெயஜோதி** அவர்களின் மேலான ஆலோசனை மற்றும் தலைமையின் கீழ் நற்செய்தி துறையும், வேதாகம கல்லூரி மாணவர்களும் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தினர். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக.

**Rev.J. Alison Jesu Nayagam**
Director- Student Ministries, AGTBC

---



# பேதுருவின் வீழ்ச்சியும் எழுச்சியும்

Rev. R. நெல்சன் ஞானகுமார்
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியங்கள்.
மூத்த போதகர், திருவண்ணாமலை ஏ.ஜி. சர்ச்.

## 1. வீழ்ச்சியை நோக்கி பேதுருவின் 7 அடிகள்

பேதுரு பின்மாற்றத்திற்கு நேராக எடுத்து வைத்த 7 அடிகளை, பார்ப்போம். பேதுருவைப் போல நீங்களும் பின்மாற்றத்திற்கு நேராய் போய்க்கொண்டிருந்தால் ஆண்டவர் உங்களை உணர்த்துவாராக.

"நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்றான்..." (மத்தேயு 26:35).

"அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்..." (மத். 26:74).

மேலேயுள்ள 35-ம் வசனத்திற்கும் 74-ம் வசனத்திற்குமிடையில் பேதுருவுக்கு சம்பவித்ததென்ன. அதாவது உயிரையும் கொடுப்பேன் என்றவன் இயேசுவை சபிக்கும், மறுதலிக்கும் அளவிற்கு பின்மாற்றமடைந்ததற்கான காரணங்கள் எவைகளென்று பார்ப்போம்.

### 1. முதலாவது அடி : தன் மீது மிதமிஞ்சிய நம்பிக்கை

"…. உமதுநிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்..." (மத்தேயு 26:33).

மேற்கண்ட பேதுருவின் வார்த்தை கீழ்க்கண்ட காரியங்களை விளங்கிக்கொள்ளச் செய்கிறது.

- தன்னைக்குறித்து சரியாக அவனுக்கே தெரியவில்லை. தானும் மறுதலிக்க, விழுந்து போக வாய்ப்பிருக்கிறது என்பதும் தானும் ஒரு பெலவீனன் தான் என்பதும் அவனுக்கு தெரியவில்லை (1 கொரி.10:12).
- தன்னுடைய சுயத்தை நம்பியிருந்தான். நான் மறுதலிக்கமாட்டேன் என்றான். அதாவது தன் பெலத்தால் தன்னை காத்துக்கொள்ள முடியுமென்றிருந்தான் (1கொரி.15:10). சுயபெலத்தினால் பரிசுத்தமாய் வாழ முடியாது. சாத்தானை மேற்கொள்ள முடியாது.
- மற்றவர்களைக் காட்டிலும் தன்னை மேன்மையாக எண்ணினான் (மத். 18:10; 1 கொரி. 5:6).

மாணவர்களே! நீங்கள் அநேக தீர்மானங்களை எடுத்திருப்பீர்கள். ஜீவனே போனாலும் என் பரிசுத்தம் போகாது என்றெல்லாம் பிரதிஷ்டை செய்திருப்பீர்கள். ஆனால் இதற்கெல்லாம் தேவ கிருபையை சார்ந்துகொள்ளுங்கள். எந்த காரியத்தில் வைராக்கியமான தீர்மானம் எடுக்கிறீர்களோ அதை சாத்தான் பலவிதத்தில் பெலவீனப்படுத்தப் பார்ப்பான். நீங்கள் அனுதினமும் தேவ கிருபையை சார்ந்திருக்காவிட்டால் எளிதில் விழுந்துவிட வாய்ப்பிருக்கிறது. தேவ கிருபையில்லாமல் சிறிய சோதனையில் கூட விழுந்துவிட வாய்ப்பிருக்கிறது. தேவ கிருபையிருக்குமானால் பெரிய சோதனையையும் இலகுவாக ஜெயிக்கலாம்.

### 2. ஜெபத்தில் தூக்கம்

"…. அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு..." (மத். 26:40,41).

பேதுருவின் பின்மாற்றத்திற்கான அடுத்த அடி ஜெபத்திலே தூங்கினதாகும். தினமும் ஒரு மணி நேரமாவது ஜெபத்திலே தரித்திருக்க முடியாதவர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்க முடியாது.

**ஜெபம் என்பது....**

- பாவ சோதனையை எதிர்த்து நிற்பதற்கு தேவையான பெலனை பெறும் நேரமாகும்.
- தேவனை எவ்வளவு நேசிக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகிறது.
- ஆண்டவருடைய சமுகத்தை நமக்கு முன் செல்ல அழைக்கும் நேரமது.
- பிசாசு நடுங்கும் நேரமிது.

மாணவர்களே! உங்கள் ஜெப வாழ்க்கையை வைத்து உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை நிதானித்து விடலாம். ஜெபிக்க நேரமில்லையா? ஜெப நேரம் போரடிக்கிறதா? எப்பொழுது ஜெபித்தாலும் தூக்கம் வருகிறதா? ஜெபிப்பதற்கு ஆர்வமில்லையா? ஜெபம் எப்போது முடியும் என்றிருக்கிறீர்களா? ஜெபம் பண்ணுவது ஒரு கஷ்டமான காரியமாயிருக்கிறதா? ஜெப நேரத்தில் ஜெபத்தை தவிர வேறு ஏதாகிலும் செய்யலாம் என்று ஆர்வப்படுகிறீர்களா?

மேற்சொல்லப்பட்ட அடையாளங்களெல்லாம் உங்களுக்குள்ளிருக்குமானால் நிச்சயமாக சொல்ல முடியும். நீங்கள் பின்மாற்றத்திலிருக்கிறீர்கள் அல்லது பின்மாற்றத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சபைக்கு வரலாம். ஊழியத்தில் கூட ஈடுபடலாம், போதகருக்கு உதவியாயிருக்கலாம். ஆனால் ஆண்டவரோடு தொடர்பு நன்றாயிருக்க வாய்ப்பில்லை. நீங்கள் எப்பொழுதும் தொடர்பு எல்லைக்கு அப்பாலேயே இருக்கிறீர்கள். எந்த கிருபை உங்களுக்கு இருக்கிறதோ இல்லையோ ஜெபிக்கும் கிருபையை கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள்.

**3. மாம்சத்தோடு போராடுதல்**

"அப்பொழுது இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் கைநீட்டித் தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்" (மத். 26:51).

ஜெபத்தில் தூங்கின பேதுரு இப்போது பிரச்சனையை சமாளிக்க ஆவிக்குரிய முயற்சி எடுக்காமல், மாம்ச முயற்சி எடுக்கிறான். தாவீதோடு இருந்த அபிசாய் சீமேயியை கொல்வதற்கு அனுமதியாவது கேட்டான். ஆண்டவரிடம் அனுமதி கேட்டால் அனுமதிக்கமாட்டார் என்றறிந்ததினால் தானோ என்னவோ? பேதுரு அனுமதி கேட்காமல் தன் இஷ்டம் போல் செயல்பட ஆரம்பித்தான் (லூக்கா 22:48-50; எபேசியர் 6:12).

மாணவர்களே! உங்களுக்கு ஒரு பிரச்சனையோ, தோல்வியோ, தேவையோ வந்தவுடன் ஜெபிக்க, தேவ நடத்துதலை நாட முயற்சிக்கிறீர்களா? வேதம் போதிக்கும் முயற்சியை எடுக்கிறீர்களா? அல்லது பிரச்சனை சரியானால் போதும், தேவை சந்திக்கப்பட்டால் போதும் என்று மாம்சத்தில் வேதத்திற்கு முரணான முயற்சியில் ஈடுபடுகிறீர்களா? பிட் அடிப்பது, பொய் சொல்லுவது, சண்டை போடுவது, கெட்ட நண்பர்களோடு சேர்ந்து தகாத செயல்களில் ஈடுபடுவது... போன்ற செயல்களில் நீங்கள் தொடர்ந்து ஈடுபட்டால் நீங்கள் பின்மாற்றத்திலிருக்கிறீர்கள் அல்லது பின்மாற்றத்தை நோக்கி பிரயாணம் செய்கிறீர்கள் என்று பொருள்.

சிலர் பிரச்சனை என்று வந்துவிட்டால், ஆலயத்தில் கேட்டது, முகாமில் கேட்டது, வேதாகமத்தில் படித்தது இவையெல்லாவற்றிலும் தூக்கி வெளியே வைத்துவிட்டு வேறே மாம்சீக முகமூடியை போட்டுக்கொண்டு மாம்சத்தில் இறங்கிவிடுகிறார்கள்.

நகோமி பஞ்சத்தில் தன்னை காக்க தேவன் விரும்பாத மோவாபிற்கு போய்விட்டாள். பின் புருஷன் செத்தான், தன் இரண்டு ஆண் மக்களும் செத்தார்கள். வாழ்க்கை கசப்புடையதாக மாறியது. பின் பெத்லகேமை தேடி வந்தாள்.

## 4. இயேசுவை தூரத்தில் பின்பற்றுதல்

"பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்று...." (மத். 26:58) தேவைப்பட்டால் ஓடிவிடலாம் என்று நினைத்தானோ என்னவோ தெரியவில்லை.

சில மாணவர்கள் சபைக்கு வருவார்கள், போவார்கள். ஆனால் சபையில் ஆராதனையைத் தவிர எந்த நிகழ்ச்சியிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டார்கள். மாணவர், வாலிபர் கூடுகையை தவிர்ப்பது, போதகரை சந்திப்பதை தவிர்ப்பது, சிறுவர், வாலிபர், பாடகர் குழு, சபை ஆராதனை, விசேஷ கூட்டங்களுக்கு ஒழுங்கு செய்வது போன்ற ஊழியங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது. உபவாசம், அதிகாலை மற்றும் சபை ஜெப நேரங்களில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

ஆராதனைக்கு தாமதமாக போவது, ஆராதனை முடிவதற்குள் வீட்டிற்கு போக நினைப்பது. ஆராதனை வந்தாலும் ஆராதிக்கும்போது கண்களை திறந்து வேடிக்கை பார்ப்பது, வேறு ஏதாகிலும் சிந்தனையிலிருப்பது, வாயை கொஞ்சம் கூட திறக்காமல் இருப்பது... அதாவது ஈடுபாட்டுடனில்லாமல், சம்பந்தமில்லாத நபரைப்போல், பெற்றோருடைய கட்டாயத்திற்காக சபைக்கு வந்துபோவது போல் இருப்பார்கள்.

இவர்கள் சாக்குபோக்கு சொல்வதில் தேர்ச்சியுடையவர்கள். எதாகிலும் சாக்குபோக்கு சொல்லி மேற்கண்ட எல்லாவற்றிற்கும் தப்பி விடுவார்கள். சிலர் சரீர உதவிகளை (கூட்டுவது, துடைப்பது, சுத்தம் பண்ணுவது, போஸ்டர் ஒட்டுவது...) செய்வார்கள். ஆனால் ஜெபம் என்றவுடனே எஸ்கேப் ஆகிவிடுவார்கள்.

மாணவர்களே! மேற்சொன்ன அடையாளங்கள் உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் பின்மாற்றத்தை நோக்கி பயணிக்கிறீர்கள் என்று பொருள். இன்றைக்கு எல்லாம் நன்றாக இருக்கிறது போல இருந்தாலும், நீங்கள் ஒரு சறுக்கலான பாதையில் இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதிருங்கள். என்றாகிலும் அந்த பாதை உங்களை கீழே விழதள்ளிவிடும்.

## 5. ஆண்டவரின் எதிரிகளோடு ஐக்கியப்படுதல்

"பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து, முடிவைப் பார்க்கும்படி சேவகரோடே உட்கார்ந்தான் " (மத். 26:58; மாற்கு 14:54; லூக்கா 22:55).

குளிர் காய உட்கார்ந்தான், ஆவியிலே குளிர்ந்தும் போனான். பின்மாற்றத்திற் கான அடுத்த அடையாளம் அல்லது காரணம் இரட்சிக்கப்படாதவர்களோடு ஐக்கியப்படுதலாகும். பின்மாற்றத்திலிருக்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களை சந்திப்பதை தவிர்ப்பார்கள். இரட்சிக்கப்படாதவர்களோடு ஐக்கியப்படுவதில் அதிகம் பரவசமடைவார்கள். அதனால் இரட்சிக்கப்படாதவர்கள் கொடுக்கும் ஆலோசனை களின்படி நடக்க ஆரம்பிப்பார்கள். தங்கள் நடை, உடை, பேச்சு, சிந்தனை, வார்த்தைகள்... எல்லாம் இரட்சிக்கப்படாத அவர்களுடைய நண்பர்களைப் போலவே மாறிவிடும். ஆனால் தான் ஒரு கிறிஸ்தவன் என்பதைக் காண்பிப்பதற்காக சபைக்கும் தொடர்ந்து வருவார்கள்.

- துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமல்... (சங். 1:1).
- அவர்கள் நடுவிலிருந்து பிரிந்துபோய்.... (2 கொரி. 6:17).
- உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை (யாக். 4:4).

## 6. இயேசுவோடுள்ளவன் என்பதை காட்டிக்கொள்ள வெட்கப்பட்டான்

"நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று, எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்" (மத். 26:70).

நான் இயேசுவோடுள்ளவன் என்று சொல்லிவிட்டால், தன்னையும் சிலுவையில் அறைந்துவிடுவார்கள் என்று பயந்து, தானும் அவர்களில் ஒருவனாக காட்டிக்கொண்டான்.

இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் வேலைக்காக, பணத்திற்காக, உலக சிநேகிதத்திற்காக இயேசுவை மறுதலிப்பவர்கள் இருக்கிறார்கள். அநேக மாணவர்கள் கூட கேலி பண்ணுவார்கள், பட்டப்பெயர் வைத்துவிடுவார்கள், ஒதுக்கி வைத்து விடுவார்கள்... என்பதற்காக தாங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதை காட்டிக்கொள்ளவே மாட்டார்கள். அப்படியே கிறிஸ்தவ பெயர் அவர்களுக்கு இருந்தாலும், தங்கள் கிரியையினால் இயேசுவை மறுதலிப்பார்கள் (தீத்து 1:16; லூக்கா 12:8,9).

மாணவர்களே! இரட்டை வேடம் போட வேண்டாம். கிறிஸ்தவன் எங்கிருந்தாலும் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும். அதாவது கிறிஸ்துவைப் போன்று ஜீவியம் செய்ய வேண்டும். சபையில் ஒரு வேஷம் பள்ளியில் ஒரு வேஷம் என்று வேண்டாம். படிக்கிற இடத்தில் நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்வதை கேவலமாக நினைத்தால் நீங்கள் பின்மாற்றத்திலிருக்கிறீர்கள்.

**7. பாவத்தில் துணிகரம் (மத். 26:70,72,74).**

மேற்கண்ட மூன்று வசனங்களை நன்றாக கவனித்துப் பாருங்கள். முதலாவது “எனக்குத் தெரியாது” என்றான். இரண்டாவது “ஆணையிட்டு” என்றிருக்கிறது. மூன்றாவது “சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்” என்றிருக்கிறது.

முதலாவது எனக்குத் தெரியாது என்று சொல்லும்போது அவன் வாய் பதறியிருக்கும். உடனே சேவல் முதல் முறை கூவிற்று (மாற்கு 14:68). குற்ற மனச்சாட்சி அவனை வாதித்திருக்கும். இரண்டாவது முறை மறுதலிக்கும்போது சிறிது தைரியம் வந்திருக்கும். மூன்றாவது மறுதலிக்கும்போது கொஞ்சமும் பயமின்றி துணிகரமாய் மறுதலித்தான்.

பின்மாற்றத்திலிருக்கிறவர்கள் முதலில் பாவம் செய்யும்போது, சிறிய பாவம் கூட மன அமைதியை கெடுத்திருக்கும். பின் அதிலே பழக பழக மனச்சாட்சியில் சூடுண்டவர்களாக துணிகரமாய் பாவத்தில் ஈடுபடுகிறதைப் பார்க்கிறோம்.

மாணவர்களே! நீங்கள் பாவம் செய்யும்போது மனச்சாட்சியில் பெரிய பாதிப்பு ஏற்படவில்லை என்றால் நீங்கள் பின்மாற்றத்திலிருக்கிறீர்கள் என்று பொருள்.

## 2. எழுச்சியை நோக்கி பேதுருவின் இரண்டு படிகள்

ஆண்டவருக்கு மகிமையுண்டாவதாக, பேதுருவின் வாழ்க்கை இதோடு நின்றுவிடவில்லை. இதற்கு பிறகு அவன் செய்த இரண்டு காரியங்கள் அவனை வித்தியாசமானவனாக மாற்றிற்று.

**1. மனங்கசந்து அழுது மனந்திரும்புதல்** (26:75).

பாவம் செய்வதைவிட கொடியது என்னவென்றால் செய்த பாவத்தைக் குறித்து உணர்வேயில்லாமலிருப்பது. உணர்வடைந்தால் மனந்திரும்ப வாய்ப்பாகிலும் இருக்கிறது. மாணவர்களே பின்மாற்றமடைந்த பேதுருவிடம் காணப்பட்ட மேற்கண்ட 7 அடையாளங்களில் எவையேனும் உங்களில் காணப்பட்டால் இன்று உணர்வடைந்து மனந்திரும்புங்கள். எல்லா பாவங்களையும் மன்னியும் ஆண்டவரே என்று பொதுவான பாவ அறிக்கை செய்யாதீர்கள். எந்தெந்த காரியங்களில் தவறியிருக்கிறீர்கள் என உணர்ந்து ஒவ்வொன்றாக அறிக்கை செய்யுங்கள். உங்கள் பாவங்கள் இரத்தாம்பர சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போல வெண்மையாக மாற்றுவார். வித்தியாசமானவனாக மாற்றுவார்.

**2. பரிசுத்தாவியின் அபிஷேகம் பெறுதல்** (அப். 1:13; 2:4; 4:8)

பரிசுத்தாவியைப் பெற்ற பிற்பாடு....

பேதுருவுக்குள் தைரியம் வந்தது. சுவிசேஷம் அறிவித்தான். ஆயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டார்கள். அற்புதங்கள் நடந்தது. சிலுவையில் தலைகீழாக கட்டப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தான். அல்லேலூயா. மாணவர்களே இன்று அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுங்கள். ஏற்கெனவே அபிஷேகம் பெற்றவர்கள் புதுப்பித்துக்கொள்ளுங்கள். வித்தியாசமானவர்களாக மாறுங்கள்.



# தேவனிடத்தில் உத்தமனாயிரு

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! தேவன் கிருபையையும் சமாதானத்தையும் உங்கள் வாழ்க்கையில் பெருகச் செய்வாராக!

"......கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகி, நான் சர்வ வல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு" (ஆதி.17:1).

நம்முடைய தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன். சர்வ வல்லமையுள்ள தேவனை நாம் ஆராதிக்கிறோம். ஆதியாகமத்தில் நாம் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று ஆபிராமுக்கு வெளிப்படுத்தினார், வெளிப்படுத்தின விசேஷத்திலும் அதையே யோவானுக்கும் வெளிப்படுத்துகிறார் (வெளி.1:8). நம்முடைய தேவன் வானத்தையும் பூமியையும் நட்சத்திரங்களையும் சர்வ சிருஷ்டிகளையும் உண்டாக்கின தேவன். மனிதனை உண்டாக்கின தேவன் மனிதனால் உண்டாக்கப்பட்ட தேவனல்ல. இப்படிப்பட்ட சர்வ வல்லமையுள்ள தேவனை ஆராதிக்கிற நாம் எப்படியிருக்க வேண்டும்? அதனால்தான் அவர் ஆபிரகாமிடம் நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு என்றார். நம்முடைய ஜீவியத்தின் மூலமாக நம்முடைய பழக்கவழக்கங்கள் மூலமாக புறமார்க்கத்தினர் நாம் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மனந்திரும்ப வேண்டும். ஆனால் இரட்சிக்கப்பட்டு பரிசுத்தாவி பெற்ற தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் சாட்சியாக ஜீவிக்கிறோமோ? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்மைச் சுற்றி இருக்கிற ஜனங்கள் நம்மைப் பார்க்கும்போது ஒரு வித்தியாசத்தை காண வேண்டும். நாம் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் அறிந்து கொண்டால்தான் அவர்களை நாம் ஆதாயம் பண்ண முடியும். அவர்களுக்கு சாட்சி சொல்லமுடியும்.

கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களும் விசுவாசிகள் என்று சொல்லப்படுகிறவர்களும் பல தவறுகளை செய்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்பதாக அவர்களுக்கு நல்லசாட்சி இல்லை. நாம் சாட்சியாக வாழ்ந்தால்தான் மற்றவர்களுக்கு சத்தியத்தைச் சொல்லமுடியும். சிலர் பைபிளை கையில் எடுக்கவே வெட்கப்படுகிறார்கள். சாட்சி சொல்ல வெட்கப்படுகிறார்கள். காரணமென்ன? அவர்கள் வாழ்க்கையில் மாற்றம் இல்லை. அவிசுவாசிகள் போல மற்ற இரட்சிக்கப்படாத பெயர் கிறிஸ்தவர்கள் போல வாழ்ந்து உலகத்தோடு கலந்து விடுகிறார்கள். உலகத்திற்கொத்த வேஷம் தரிக்கிறார்கள். ஆகவே, இந்த உலகத்தார் உங்களைப் பார்க்கும்போது ஒரு வித்தியாசத்தை நீங்கள் காண்பிக்க வேண்டும். நாம் பரலோக இராஜ்யம் போவோமா இல்லையா என்பது இப்பொழுதே நம் ஒவ்வொருவருக்கும் தெரியும். ஆகவே இரட்சிக்கப்பட்டேன்.

ஞானஸ்நானம் பெற்றேன். பரிசுத்தாவி பெற்றேன் என்று சொல்லுகிற உங்களுடைய வாழ்க்கையில் ஒருமாற்றம் இருக்க வேண்டும். பேச்சு பழக்கம் கிரியைகள் பார்வைகள் எல்லாவற்றிலும் மாற்றம் இருக்க வேண்டும்.

நம்முடைய தேவன் பரிசுத்தர். ஒருவரும் சேரக்கூடாத உன்னத ஒளியில் வாசமாயிருப்பவர், ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிறார். இப்படிப்பட்ட தேவன் தம்முடைய பிள்ளைகள் மூலமாக இந்த உலகத்திற்கு தம்மை வெளிப்படுத்துகிறார். விக்கிரகங்களை ஆராதிக்கிற ஜனங்கள் மத்தியிலே ஆண்டவர் நம்மைக்கொண்டு வைத்திருக்கிறார். எதற்காக? நாம் இருக்கிற இடத்திலே இருக்கிற ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ள வேண்டும். ஆபிரகாமை கர்த்தர் ஒருவனாக அழைத்தார். அவன் மூலமாக பரிசுத்த சந்ததி உருவானது. ஆனால் அவர்கள் பிற்காலங்களில் தேவனைவிட்டு விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் அவர்கள் வாழ்க்கையில் பல்வேறு உபத்திரவங்கள் வந்தது. நம்முடைய வாழ்க்கையில் ஏன் பல்வேறு உபத்திரவங்கள் வருகிறதென்றால் நம்மை அழைத்த கர்த்தருக்கு நாம் உண்மையாக நடக்கவில்லை. அவருடைய சித்தம் செய்யவில்லை. அவருடைய சாயல் நம்மில் வெளிப்படவில்லை. அவருடைய சத்தியத்தின்படி வாழவில்லை. அதனால் மற்ற ஜனங்களும் கர்த்தரை அறிய முடியவில்லை. ஆகவே இந்த செய்தியை வாசிக்கிற நீங்கள் உங்களை ஆராய்ந்து பாருங்கள். மற்றவர்களுக்கு நாம் இடறலாயிராமல் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும். நம்முடைய குறைகளை கர்த்தருக்கு முன்பாக ஒத்துக்கொண்டு நாம் மனந்திரும்புவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார். ஆமேன்....

---

## போதகர்கள் துணைவியர் முகாம்

கடந்த ஆகஸ்ட் 21,22 தேதிகளில் கன்னியாகுமரியில் Tamil District Pastors' Wives Camp நடைபெற்றது. **Sis.கெத்சியாள் மோகன்** அவர்கள் **"ஆசையாய் தொடர்கிறேன்"** என்ற தலைப்பில் கொடுத்த செய்தியும் ஜெபமும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. அதிகாலை தியான வேளையில் **Dr.ராணி ஜெயச்சந்திரன்** அவர்கள் **"சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டு கெம்பீரி"** என்ற தலைப்பில் கொடுத்த செய்தி ஊழியத்தை இன்னும் ஊக்கத்தோடு செய்ய உந்துதலாய் இருந்தது. சிறப்பு செய்தியாளராக அழைக்கப்பட்டிருந்த **Dr.ஜெயராணி** அவர்கள் அளித்த **''ஸ்திரீகளுக்குள்ளே யாகேல் ஆசீர்வதிக்கபட்டவள்"** மற்றும் **Come to the Next Level** (இங்கே ஏறி வா) ஆகிய செய்திகள் மூலம் எங்கள் ஒவ்வொருவரோடும் கர்த்தர் பேசினார். பரலோக மகிமையை கண்டோம். மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது.

**Sis.கெத்சியாள் மோகன்** அவர்களுக்கும், **Dr.ராணி ஜெயச்சந்திரன், Dr.நிர்மலா ஜெயராஜ்** மற்றும் பெண்கள் நிர்வாக கமிட்டிக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள். மேலும் எங்களை அன்போடும் அக்கறையோடும் கவனித்துக்கொண்ட பாஸ்டர் **தாமஸ்**, **Sis.எலிசபெத் தாமஸ்** மற்றும் அவர்களுடன் இணைந்து உதவி செய்த போதகர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**திருமதி. லிடியா டேனியல்,**
காரைக்கால் (திருவாரூர் மண்டலம்)



### சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


**பாஸ்டர். பெவிஸ்டன்**

பரமன்குறிச்சி, நாசரேத் மண்டலம்


ஹாய் குட்டீஸ்.... எல்லாரும் எப்படியிருக்கிறீங்க.... உங்களை சந்திப்பதில் ரொம்ப மகிழ்ச்சியடைகிறேன். சமீபத்தில் நான் சில சிறுவர்களை சந்தித்தபோது... அண்ணா... என்னோட பிரண்ட்ஸ் ரொம்ப மோசம். தப்பு தப்பான காரியங்களை செய்றதுக்கு ஐடியா கொடுக்கிறாங்க.... நாங்க பாவ சிந்தனையை எப்படி ஓவர்கம் பண்ணுறது கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்கணு கேட்டிருந்தாங்க... அவர்களுக்கு மட்டுமில்ல உங்களுக்குள்ளும் இதே கேள்வி இருக்கலாம். உங்களுக்கு புரியும்படி பதிலை ஒரு கதை மூலம் விளக்குகிறேன் வாருங்கள்.

ஒரு அழகான கிராமம் இருந்தது. காட்டில் கிடைக்கும் தேன், மூலிகைகள் போன்ற பொருட்களினால் அந்த கிராமம் எப்பொழுதும் செழிப்பாக இருந்தது. ஆனாலும் அங்கே ஒரு பெரிய பிரச்சனையும் இருந்தது. அவர்களை வாழ வைத்த காட்டில் ஒரு வகை மரம் இருந்தது. அதன் கனி அழகானது. பலமான அதன் வாசனை அதை உண்ணத் தூண்டும்.

ஆனால் தப்பித்தவறி அதை உண்டுவிட்டால் அவ்வளவுதான். உண்டவர்கள் ஒரு மாதம் வரை தன்னை மறந்து வெறி பிடித்து அலைவார்கள். கண்ணில்படும் எவரையும் தாக்குவார்கள். கொடூரமாய்ப் பசிக்கும். எது கிடைத்தாலும் சாப்பிடுவார்கள். பெரும்பாலும் ஒரு மாதத்திலேயே பசியில் மடிவார்கள்.

ஒரு வேளை புத்தி தெளிந்தாலும், அந்த கனியின் ஆசை மீண்டும் அதைப் புசிக்க வைத்துவிடும். இதனாலேயே அங்கே ஒரு வழக்கம் இருந்தது. பழத்தை உண்ட வெறியோடு யாராவது கண்ணில் பட்டுவிட்டால் அவனைக் கல்லெறிந்து கொன்று விடுவார்கள். ஏனென்றால் அவன் திருந்த வாய்ப்பே இல்லை என்பதுடன் அவனால் பிறருக்கு ஆபத்தும் நேரிடும். வருடத்தில் ஒருவரேனும் இப்படிக் கல்லெறிப்பட்டு சாவது வழக்கமாகிப்போனது.

அந்த கிராமத்தில் அன்பான ஒரு தகப்பன் இருந்தார். அவர் தன் மகன் மீது உயிரையே வைத்திருந்தார். அவனிடம் அந்த மரத்தின் தீமைகளைப் பற்றிச் சொல்லி இருந்தார். அவனும் எச்சரிக்கையாகவே இருந்தான்.

ஒரு நாள் அவன் காட்டுக்குள் தேனெடுக்கச் சென்றபோது அவன் கொண்டு சென்றிருந்த கஞ்சிக் கலயம் தவறுதலாகக் கீழே விழுந்து உடைந்தது. அன்றைக்கென்று சோதனையாய் தேன்கூடு எதுவுமே கண்ணில் படவில்லை. பசி குடலைத் தின்றது. வீடு திரும்பச் செல்வதென்றால் சில மணி நேரங்களாகும். பசி மயக்கத்தில் விஷக்கனியின் வாசனை மூக்கைத் துளைத்தது. ஒரு யோசனை தோன்றியது. தின்றால்தானே பிரச்சனை? முகர்ந்தால் கொஞ்சம் பசி அடங்குமே. முகர்ந்தபடியே ஊர் போய் சேர்ந்து விடலாம் என்ற முடிவுடன் மரத்தருகே வந்து கீழே ஒரு கனியைக் கையில் எடுத்துக்கொண்டான். அவன் யோசனை சரிதான். பழத்தை முகர்ந்தவுடனே பசி குறைந்தது. வேகமாய் வீடு நோக்கி நடந்தான்.

பழத்தின் வாசனை கொஞ்சம் கொஞ்சமாய் அவனை வெறி கொள்ள வைத்தது. சிறிது நேரத்தில் தன்னை மறந்தான். தின்றுவிட்டான். மிருகமாய் கத்தியபடி ஊருக்குள் ஓடினான். கண்ணில் பட்டவர்களையெல்லாம் தாக்கப் பாய்ந்தான். செய்தி ஊருக்குள் பரவியது. எல்லோரும் கல்லோடு கூடி வந்தார்கள். இல்லையென்றால் அவர்களுக்கல்லவோ ஆபத்து?

இந்தச் செய்தி அறிந்த தந்தை கதறி ஓடி வந்தார். ஊர் தலைவரிடம் அழுது, கெஞ்சி மகனால் யாருக்கும் ஆபத்து வராது என்று வாக்களித்தார். ஏற்கெனவே மகன் இரண்டு மூன்று கற்களால் தாக்கப்பட்டு மயங்கி விழுந்து கிடந்தான். ஊர்த்தலைவர் சொன்னார், “ஜாக்கிரதை ..... அவன் உங்களையே கொல்லலாம். அது மட்டுமில்லாம மறுபடியும் பழத்தை தின்னாம அவனால இருக்கவே முடியாது”.

தந்தையின் நல்ல பெயரால், அந்த ஊரில் முதல் முதலாய் அவன் கல்லடிக்குத் தப்பினான். ஒரு மாதம் ஓடின. மகன் வெறி தெளிந்து எழுந்தான். பழத்தைத் தின்றது நினைவுக்கு வந்தது. தான் உயிருடன் இருப்பதை நம்ப முடியவில்லை. மகன் தெளிவாய் அமர்ந்திருப்பதைப் பார்த்து அப்பா ஓடிவந்து அவனை இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டார்.

மகன் அழுதபடி கேட்டான் “ஏம்ப்பா இப்படி இளைச்சுட்டீங்க? அப்பா: நான் ஒரு மாதமாக சரியா சாப்பிடலப்பா, ஏம்ப்பா கண்ணெல்லாம் இப்படி வீங்கிக் கிடக்குது அப்பா, தூங்கவே இல்லை. அதோட தொடர்ந்து அழுதுட்டே இருந்தேன்”.

திடீரென்று பதறிக் கேட்டான். “என்னப்பா கையில காயம்?” அப்பா : “அது உனக்கு சாப்பாடு ஊட்டும்போது நீ கடிச்சது. உனக்கு அப்பல்லாம் ரொம்ப பசிக்குமே”

“கழுத்தில் இருக்கிற காயம்?” அப்பா : “தரையில தூங்கறியேன்னு தூக்கி மெத்தைல படுக்க வச்சேன். அப்ப நீ கடிச்சது”. மகன் கதறி அழுதான். “எனக்காக இவ்வளவு பாடுபட்டீங்களே அப்பா! எல்லாரையும் போல சாக விட்டிருந்தா இந்தப் பாடுகள் உங்களுக்கு வந்திருக்குமா?” அப்பா சிரித்தபடி சொன்னார், “நீ புத்தி தெளிந்து அழுவதைப் பார்த்ததும் என் காயத்தின் வலியெல்லாம் மறைஞ்சே போச்சுடா!”

ஒருவாரம் கழித்து மகன் மீண்டும் காட்டுக்குப்போனான். பழத்தின் நினைவு வந்து கை கால் நடுங்கியது. சகலமும் மறந்து பழத்தைக் கையில் எடுத்தான். கடிக்கப்போன வேளையில் நினைவுக்கு வந்தது அவனுக்காக அப்பா பட்ட காயங்கள். இல்லப்பா இனிமே நீங்க என்னால காயப்பட விடமாட்டேன். பழத்தைத் தூக்கி வீசிவிட்டு வீடு திரும்பினான்.

அன்பான தம்பி... தங்காய்...! பிசாசு உனக்குள் பாவ இச்சையைக் கொண்டு வர முயன்றால் நீ உனக்காக இயேசப்பா பட்ட காயங்களை நினைத்துப் பார். பிசாசும் அவன் கொண்டு வரும் பாவங்களும் ஓடிப்போகும்.

தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும், என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் (சங். 139:23).

இயேசுவின் அன்பை தெரிஞ்சுக்கோ.. உனக்காக அவர் பட்ட பாடுகளை நினைத்து பாவத்திலிருந்து தப்பிச்சுக்கோ... இந்த கதை நிச்சயம் உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். உங்கள் கருத்துக்களை 97503 81784 என்ற எண்ணிற்கு SMS பண்ணுங்க. அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்... Bye...



# HOW TO IDENTIFY YOUR JOSHUA?

## யோசுவாவை அடையாளம் காணுவது எப்படி?

**Rev. லின்ஸி ஜோன்ஸ்** (President, CA)

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்!

இந்த இதழின் மூலம் மீண்டும் உங்களை சந்திக்க, கிருபையும் வாய்ப்பும் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!!

கடந்த இதழில் யோசுவாக்களை எவ்வாறு அடையாளம் காண்பது?/ கண்டுபிடிப்பது? என்ற கேள்வியோடு நிறுத்தினதை இந்த இதழில் பதிலோடு தொடங்குகிறேன்.

சுதந்திரத்தை பங்கிடும் தேவவேலையை யோசுவாவைக் கொண்டு தேவன் செய்யும்படி அவனை முன்குறித்திருந்தாலும், யோசுவாவை கண்டுபிடித்து அவனை உருவாக்கி, தேவசித்தத்தை சரியான விதத்தில் நிறைவேற்ற தேவன் பயன்படுத்தியது மோசேயே ஆகும்.

ஒரு மோசேயாக தேவசித்தம் உள்ள ஒரு தலைவனை எப்படி அடையாளம் கண்டுகொள்வது அல்லது உருவாக்குவது?

### முதலாவது - இலட்சங்களிலிருந்து 12 பேர்

எண்ணாகமம் 13-ஆம் அதிகாரத்தின்படி "பாரான்" என்னும் பெயரின் அர்த்தம் "அழகான/ மகிமையான" (Beautiful / Glorious) என்பதாகும்.

நம்முடைய வாழ்வில் அழகான/ மகிமையான தருணங்கள் தேவ சித்தத்தை நாம் தெரிந்துகொள்ளும் தருணங்களே ஆகும். சுமார் ஆறு லட்சம் ஜனங்களிலிருந்து,தோராயமாக 12 கோத்திரத்தில் என்று எடுத்துக்கொண்டால் ஒரு கோத்திரத்திற்கு சுமார் 50,000. 50,000 பேரிலிருந்து ஒருவரை தெரிந்தெடுப்பது சாதாரணமான காரியம் அல்ல. இதை நிறைவேற்ற தேவன்கொடுக்கும் ஒரே ஒரு அளவுகோல் எண்ணாகமம் 13:2-ல் உள்ள படி "ஒவ்வொரு பிரபுவாகிய புருஷன்" என்பதாகும்.

யோசுவாவை அடையாளம் காண்பதற்கு முதல் அளவுகோல் "People Who Are Influential" (தாக்கத்தை ஏற்படுத்தும் வாழ்க்கை வாழும் ஜனங்கள்)

யோசுவா என்பவன் எப்படியோ வாழவிரும்புபவன் அல்ல, பிரபுவாக வாழ்பவனே ஆகும். மோசேக்களே, யோசுவாக்கள் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாய் இருப்பார்கள். எப்படிப்பட்ட தாக்கம்? யோசுவா வந்த கோத்திரம் எப்பிராயீம் கோத்திரம். அப்படியானால் அர்த்தம் என்ன? "எப்பிராயீம்" என்றால் "கனியள்ள"(Fruitful) என்று அர்த்தம்.

யோசுவா என்றால் யார் தெரியுமா? "கனியுள்ள பிரபு"/ "நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிற தலைவன்". மோசேக்களே கர்த்தர் சொன்னார் என்பதற்காக, உங்களுக்கு புதிதான தலைவரை அல்ல (அல்லது) எதிர்மறையான தாக்கத்தை உண்டாக்குகிற தலைவனை அல்ல மாறாக, கனியுள்ள தலைவன் சுருக்கமாக உங்கள் யோசுவாவின் கோத்திரம் எப்பிராயீமாய் இருப்பதாக.

நீங்கள் தெரிந்தெடுக்கும் தலைவனின் குணாதிசயம் கனியுள்ள வேராய் இருப்பதாக

**இரண்டாவதாக –** Relationship/ Friendship with Visionary Leaders

அன்பான மோசேக்களே யோசுவாக்களை அடையாளம் காணவேண்டுமானால் அவர்களுடைய தொடர்பு/ நண்பர் யார் என்பதை பாருங்கள். யோசுவாக்கள் எப்பொழுதும் தரிசனமுள்ள காலேப்புகளோடு தங்களை இணைத்துக் கொள்வார்கள். “காலேப்” என்ற வார்த்தைக்கு உண்மையுள்ள (Faithful/Whole hearted) முழுஇருதயமுள்ள என்பது பொருள். அவர் கோத்திரம் “யூதா” (Praise) “துதி”.

உங்கள் யோசுவாவின் நண்பர்/ நீங்கள் தெரிந்தெடுக்கும் யோசுவாவின் நண்பர் உண்மையுள்ள நபராகவும் எதையும் முழுஇருதயத்தோடு செய்கிறவராகவும், துதிக்கிறவராகவும் இருப்பாராக!! உண்மையுள்ள நபரோடு தன்னை இணைத்துக் கொள்பவனே உண்மையுள்ளவனாய் வாழ்வான்.

**மூன்றாவதாக–** Your Joshua will be Concerned about God's Will

எண்ணாகமம் 14:6-8 யோசுவாவை கண்டுகொள்ள மூன்றாவது அடையாளம் எப்பொழுதும் தேவ சித்தத்தை குறித்த தரிசனம் உள்ளவனாய் இருப்பான். மேற்காணும் வேதபகுதியில் தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு என்று வாசிக்கிறோம். தேவசித்தம் செய்ய எந்த நஷ்டத்தையும் சகித்துக்கொள்ளும் குணாதிசயத்தை இது வெளிப்படுத்துகிறது.

மோசேக்களே உங்கள் யோசுவாவின் மிக முக்கிய குணமாக இது இருக்கட்டும். தேவசித்தத்திற்காக எதையும் இழக்க ஆயத்தமுள்ளவன் எதற்காகவும் தேவசித்தத்தை இழக்க துணிய மாட்டான்.

யோசுவாவின் இன்னும் சில அடையாளங்களோடு அடுத்த இதழில் சந்திக்கிறேன். அதுவரை “கனியுள்ள வாழ்வோடும், தரிசனமுள்ள உறவோடும், தேவசித்தம்மேல் கரிசணையுள்ள உணர்வோடும் யோசுவாவை அடையாளம் காண தேவன் உங்களுக்கு உதவுவாராக!

- எகிப்திய அடிமையிலிருந்து
- நேர்மறையான வேவுகாரனாக
- மோசேயின் தனிப்பட்ட ஊழியனாக
- இராணுவ தளபதியாக
- இஸ்ரவேலின் தலைவனாக

---

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ. **1,00,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.

ஆசிரியர்



# எங்கே போகிறீர்கள்?

## Where are you going?


**Rev. பெகின் சாமுவேல்**

(AGCM Director)


ஆண்டவரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பரிபூரண ஜீவன் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் தமிழ்ப் பிரதேச சிறுவர் ஊழியங்கள் சார்பாக என் வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தருடைய பெரிதான இரக்கத்தாலும், உங்கள் ஜெபங்களாலும் நமது சிறுவர் ஊழியங்கள் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நவம்பர் மாதத்திலும் நடைபெற இருக்கிற Bible Champions-க்காக பிள்ளைகளை ஆயத்தப்படுத்த உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன்.

இந்த இதழிலும் "நாம் எங்கே போகிறோம்" என்று யோனாவின் சம்பவத்திலிருந்து சில காரியங்களை தியானிப்போம். இந்த சம்பவம் நாம் அனைவரும் அறிந்த ஒன்று. தேவன் யோனாவை நினிவேக்கு போகச் சொன்னார். ஆனால் அவன் தர்ஷீசுக்கு நேரே புறப்பட்டு போனான். இந்த சம்பவத்திலிருந்து பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டிய சில காரியங்கள் உண்டு. யோனா எவைகளை விட்டு ஓடினான் என்றும், நாம் இந்த காரியங்களில் எப்படி இருக்கிறோம் என்றும் பார்ப்போம்.

### 1. தேவனுடைய சமுகம் (Presence of God)

யோனா 1:3-ம் வசனத்தில் யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி.... என்று வாசிக்கிறோம். யோனா நினிவேயை விட்டு ஓடினான் என்பது நமக்கு தெரிந்திருந்தாலும், அவன் விலகி சென்ற காரியம் முதலாவது தேவனுடைய சமுகம், அதாவது தேவ பிரசன்னத்தை விட்டு விலகினான். தேவ பிரசன்னத்தை விட்டு விலகும்போது அவனுடைய வாழ்க்கையில் கொந்தளிப்புகளும், சோதனைகளும் வந்தன. தேவ தாசனாகிய மோசே தேவ பிரசன்னத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்திருந்ததனால்தான், உம்முடைய சமுகம் என்னோடே கூட செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும் என்றான் (யாத்33:15). பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் தேவ பிரசன்னத்தினால் நடத்தப்படுகிற வாழ்க்கைக்குள் இருக்கிறார்களா? நீங்கள் அவர்களை அவ்வாறு நடத்துகிறீர்களா? என்று சற்று யோசித்துப் பாருங்கள். தேவனுடைய சந்நிதியாகிய சபைக்கு அவர்கள் ஒழுங்காக செல்கிறார்களா? ஆண்டவரோடு அவர்களுடைய ஐக்கியம் எப்படியிருக்கிறது என்பதை நாம் கவனித்து அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். தேவ பிரசன்னத்திற்குள் இருக்கும்போது தான் அவர்களுக்கு பாதுகாப்பு. சாத்தானால் அவர்களை தொட முடியாது.

### 2. தேவனுடைய சித்தம் (Will of God)

தேவனுடைய சித்தம் என்னவெனில், யோனா நினிவேக்கு போய், அங்குள்ள ஜனங்களுக்கு தேவனுடைய எச்சரிப்பைக் குறித்து பிரசங்கிக்க வேண்டும். ஆனால் அவனுக்கு அந்த சித்தத்தை நிறைவேற்ற மனமில்லை. தன் மனவிருப்பத்தின்படி,

அவன் தர்ஷீசுக்கு போக முற்பட்டான். அதற்கு ஏற்றாற்போல், அங்கு தர்ஷீசுக்கு போகிற கப்பல் நின்றது. அவன் அதில் ஏறினான். தேவனுடைய சித்தத்திற்கு எதிராய் ஓடினான்.

சில நேரங்களில் நாம் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்திற்கு எதிராய் சில முடிவுகளை எடுத்து, நம்முடைய சுய விருப்பத்தை நிறைவேற்ற முயலும் போது சூழ்நிலைகள் நமக்கு சாதகமாய் இருப்பது போன்றுதான் தோன்றும். அவைகளைப் பார்த்து ஏமாந்துவிடாது, இது தேவனுடைய சித்தம்தானா? என்று ஜெபித்து காரியங்களை நடத்த வேண்டும். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றாமல் தன் சுய சித்தம் நிறைவேற நினைத்த சிம்சோனுடைய வாழ்க்கையின் முடிவு மிகவும் பரிதாபத்திற்குரியதாய் மாறியது. கண்கள் பிடுங்கப்பட்டவனாய், எந்திரம் அரைக்க நியமிக்கப்பட்டான். எனவே தேவசித்தம் பிள்ளைகளுடைய வாழ்வில் நிறைவேற ஒப்புக்கொடுங்கள்.

### 3. தேவனுடைய வார்த்தை (Word of God)

யோனா கி.மு.எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு நல்ல தீர்க்கதரிசிதான். அவனிடம் தேவன் அநேக வேளைகளில் பேசியிருப்பார். அப்படித்தான் இந்த காரியத்திலும், யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது என்றுதான் யோனா புத்தகத்தின் முதல் வசனமே ஆரம்பிக்கிறது. ஆனாலும் யோனா தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றாமல் ஓடினான். எனக்கு அருமையான பெற்றோர்களே, தேவன் பிள்ளைகளை குறித்து சில காரியங்களை சொல்லியிருப்பாரானால் அவைகளை நிறைவேற்றுங்கள். அந்த காரியங்களை விட்டு ஓடச் செய்யாதிருங்கள். ஏனெனில், அது தேவன் கொடுத்த கட்டளை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் ஓடின யோனாவின் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்பட்டதாக நாம் பார்க்க முடியாது. முதலில் கடலுக்கு ஓடுகிறான். கப்பலின் அடித்தட்டில் போய் படுத்திருக்கிறான். அங்கிருந்து, மீனின் வயிற்றிற்குள் போகிறான். எல்லாமே தாழ்வை நோக்கி சென்றதான வாழ்க்கைதான். தேவனுடைய வார்த்தையை மீறி செல்ல முற்பட்டதன் விளைவு அவனும், அவனைச் சார்ந்தவர்களும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். சிறுபிராயத்திலிருந்தே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---


**தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு செய்திகள், கவிதைகள், துணுக்குகள், கடிதங்கள், சாட்சிகள் யாவற்றையும் அனுப்பித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்**

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

ஆசிரியர், **பரிபூரண ஜீவன்,**
43/3 ஆபிசர்ஸ் காலனி, புத்தூர், திருச்சி - 17
செல் : 94434 15484




Worshipping Jesus at an infant today in a very real sense denies the rest of Christ's history. It diminishes his present status of being the glorified Lord of all. If we worship Jesus as an infant today, we do not worship the Jesus of the Bible. Jesus Christ is unique and incomparable. Throughout history great men have come and gone, yet **Jesus lives on**. Let us see some of the aspects of uniqueness of Jesus Christ.

### 1. He APPEARED in the flesh

This is the truth of the incarnation. The Bible says, "And the Word become flesh, and made his dwelling among us. We have seen his glory, the glory of the One and the Only who came from the father, full of grace and truth" (John 1: 14). God has, literally appeared to us in human flesh. Jesus is the radiance of God's glory and the exact representation of his being' (Heb. 1:3). The invisible and infinite God become visible and finite when he took the form of a man. Having appeared in the flesh, he shared the problems of the flesh (Heb. 2:18, 4: 15) and showed us a pattern to follow (1 Peter 2: 21).

### 2. He ARRANGED our redemption

Not only has he appeared in the flesh, He has also arranged our redemption. The Bible says, "God sent forth his son… in order that he might redeem us" (Gal. 4:5). The name "Jesus" means Saviour (Matthew 1:21). In order to become our Saviour and Redeemer, God in Christ took on human flesh. In doing so, He lived our life, faced our temptations, bore our sins, carried our sorrows, and died our death. He was the only sinless man who ever lived (John 8:46). He was the only sacrifice that could take away sins (John 1:29). He is the only Saviour who can take you to heaven (John 14: 6)!

### 3. He AGONIZED on the cross

So focused on the nativity, we sometime forget that there was, and is, a cross in Christmas. The cross overshadowed the manager. This truth is seen in Simeon's statement to Mary, when the baby Jesus was presented in the temple (Luke 2: 34-35). Jesus' death on the cross was unique because he took our place in that (2 Corinthians 5:21; Galatians 3:13). His death was substitutionary and voluntary. The nails did not hold him on the cross but it was His love for mankind (John 3: 16). He died on the cross to purchase a place for us in heaven which he offers as a free gift. What a Saviour!

### 4. He AROSE from the dead

Speaking of the uniqueness of Christ, He did something that no other living person has ever done. He arose from the dead never to die again (1 Corinthians 15:3-4; Romans 6: 9). Jesus in his resurrection proved beyond a trace of doubt that he stands alone in history as God. All other so called gods are all dead and gone. But not Jesus! Herod could not kill him, Satan could not seduce him, death could not destroy him and grave could not hold him! Jesus is a living God!

### 5. He ASCENDED to the father

The uniqueness of Christ is further seen in His ascension. A gospel writer Luke described the ascension of Jesus like this. "And after he had said these things. He was lifted up while they were looking on, and a cloud received him out of their sight, and as they were gazing intently into the sky while He was departing, behold two men in white clothing stood beside them" (Act 1:9-10). Jesus is no longer in the manger or on the cross. He is in heaven today seated at the right hand of the Father interceding for us (Romans: 8:34). He is the King of kings and the Lord of Lords!

### 6. He will ARRIVE at any moment

Before ascending to Heaven, Jesus often said, "I will come again!" As Jesus was being taken up to heaven, an angel said to the disciples, "Men of Galilee, why do you stand looking into the sky? This Jesus, who has been taken up from you into heaven, will come in just the same way as you have watched him go into heaven." (Acts 1:11). When Jesus came for the first time, He came as the SAVIOUR. When he comes again, He will come as the JUDGE. Those who believe on Him and accept Him as their Saviour today will not face the last judgment for condemnation. Would you accept him as your Saviour now?

- Adapted

---

## யோவான் சுவிசேஷத்தில் இயேசு
## PORTRAITS OF JESUS IN JOHN'S GALLERY

| | |
|---|---|
| தேவனுடைய வார்த்தை | - The Word of God (யோவான் 1:1-18) |
| மனுஷ குமாரன் | - The Son of Man (யோவான் 2:1-11) |
| தெய்வீக போதகர் | - The Divine Teacher (யோவன் 3:1-21) |
| ஆத்தும ஆதாய வீரர் | - The Soul Winner (யோவான் 4:1-30) |
| உன்னத பரிகாரி | - The Great Physician (யோவான்5:1-9) |
| ஜீவ அப்பம் | - The Bread of Life (யோவான் 6:22-35) |
| ஜீவதண்ணீர் ஊற்று | - The Fountain of Living Water (யோவான் 7:37-39) |
| இரக்கமுள்ள இரட்சகர் | - The Sympathetic Savior (யோவான் 8:1-11) |
| உலகத்தின் ஒளி | - The Light of the World (யோவான் 9:1-11) |
| நல்ல மேய்ப்பர் | - The Good Shepherd (யோவான் 10:1-16) |
| உயிர்த்தெழுதலும் ஜீவனும் | - The Resurrection and the Life (யோவான் 11:18-27) |
| ராஜா | - The King (யோவான் 12:12-19) |
| தாழ்மையுள்ள பணிவிடைக்காரன் | - The Humble Servant (யோவான் 13:1-20) |
| உற்சாகப்படுத்துபவர் | - The Great Encourager (யோவான் 14:1-31) |
| மெய்யான திராட்சை செடி | - The True Vine (யோவான் 15:1-11) |
| பெரிய ஈவு அளிப்பவர் | - The Great Gift Giver (யோவான் 16: 7-15) |
| பிரதான ஆசாரியர் | - The Great High Priest (யோவான் 17:1-26) |
| பாடுபடுபவர் | - The Model Sufferer (யோவான்18:1-14) |
| சிலுவையில் அறையப்பட்ட ராஜா | - The Crucified King (யோவான் 19:1-18) |
| உயிர்த்தெழுந்த மீட்பர் | - The Resurrected Redeemer (யோவான் 20:1-18) |
| விழுந்துபோனவர்களின் நண்பன் | - The Friend of the Fallen (யோவான்21:1-19) |

## விருதுநகர் மண்டல ஏ.ஜி. சபைகளின் பெண்கள், சிறுவர் முகாம், மரம் நடுவிழா

அருப்புக்கோட்டைக்கு அருகில் கல்லூரணி அற்புத ஏ.ஜி. சபையில் பெண்கள் முகாம், சிறுவர் முகாம் விருதுநகர் மண்டல ஏ.ஜி. சபைகளின் தலைவர் **பாஸ்டர் தர்மராஜ்** தலைமையில் நடைபெற்றது. பாடல். ஆராதனையை **ரீனா, பாக்கியம், ரெபேக்காள், ஜெபா** ஆகியோர் நடத்தினார்கள். திருமதி **வசந்தா ராஜமணி** (மதுரை) தேவசெய்தி வழங்கினார்கள். **கல்யாணி, ரோஸி. சுஜா மேரி, ஷீபா, ஜெபசெல்வி,** வேதவினா போட்டி நடத்தி, வறுமை, வன்முறை ஒழிந்திட, மக்கள் சமாதானம் பெற்றிட, சபைகளின் வளர்ச்சிக்காக ஜெபித்தனர். சிறுவர் முகாமினை காஞ்சிபுரம் **பாஸ்டர் எபினேசர்,** மல்லாங்கிணறு **பாஸ்டர் ஆரோக்கிய சந்தனராஜ்** நடத்தினார்கள். மண்டல பெண்கள் முகாம் ஒருங்கிணைப்பாளர் **தேன்மொழி தர்மராஜ், வசந்தா ராஜமணி** மரக்கன்றுகளை நட்டனர். கல்லூரணி ஏ.ஜி. சபை **பாஸ்டர் ஜேக்கப் ஜெம்புலிங்கம்** கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். முடிவில் **பெல்சியா கனகு** நன்றி கூறினார்.

## அம்பை மண்டல சிறுவர் முகாம் - 2019

அம்பை மண்டல சிறுவர் முகாம் கடந்த 02.10.2019 (புதன்கிழமை) அன்று முக்கூடல் ஏ.ஜி. சபையில் வைத்து மிக சிறப்பாக நடைபெற்றது. மண்டல தலைமை போதகர் **Rev.K.A.அலெக்ஸாண்டர்** அவர்களின் ஜெபங்களும் மேலான ஆலோசனைகளும் இம்முகாம் சிறப்பாக நடைபெற காரணமாக அமைந்தது. “இயேசுவும் நானும்” என்ற கருப்பொருளை மையமாக கொண்டு **பாஸ்டர் பெவிஸ்டன்** & குழுவினர் (பரமன்குறிச்சி) அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்குபெற்று சிறுவர்களை உற்சாகப்படுத்தி கிறிஸ்துவண்டை வழிநடத்தினார். இம்முகாமிற்கு மண்டலத்தின் அனைத்து போதகர்களும் தங்கள் சபையிலுள்ள பிள்ளைகளை உற்சாகப்படுத்தி அழைந்து வந்திருந்தனர். பிள்ளைகள் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிந்து கொள்ளவும், அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளவும் இம்முகாம் பேர் உதவியாக அமைந்தது.தேவனுக்கே மகிமை.

**பாஸ்டர் D.ஜேசுதாஸ்,** மண்டல சிறுவர் ஊழிய பொறுப்பாளர்.

## தேனி மண்டல ஏஜி சபைகளின் ஆண்கள் முகாம், வாலிபர் முகாம் 2019

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே தேனி மண்டல ஆண்கள் முகாம், வாலிபர் முகாம் செப்டம்பர் 2 திங்கள்கிழமை, தேனி ஜீஸஸ் எக்கோ ஏ.ஜி. சபையில் வைத்து இனிதே நடைபெற்றது. தேனி மாவட்ட ஏஜி சபைகளில் இருந்து சுமார் 80 ஆண்கள், 110 வாலிபர்கள், போதகர்கள், வாலிபர் ஊழிய பொருப்பாளர்கள் என சுமார் 250 பேர் கலந்து கொண்டனர்.

**எழும்பி செயல்படு** என்ற கருப்பொருளில் சவாலான தேவ செய்திகளை **Rev.P.ஸ்டேன்லி** (பெராக்கா எழுப்புதல் ஊழியங்கள்-செம்பன்னார் கோவில்) **Rev.R.தாசையா** (தேனி மண்டல தலைமைப் போதகர்) ஆகியோர் பகிர்ந்து கொண்டது வாலிபர்களையும், ஆண்களையும், தேவனுக்காக எழும்ப, தேவனுக்காக செயல்பட ஊக்குவித்தது. மண்டல ஊழியர்கள், இம்முகாம்களின் பல்வேறு பொறுப்புகளை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை மிக நேர்த்தியாய் செய்தது. ஆசீர்வாதமான முகாமாய் மாற உதவியது. சகல கனமும் மகிமையும் தேவனுக்கே உண்டாவதாக

**Rev.M.வின்சென்ட் ஜேக்கப்,** மண்டல செயலாளர், தேனி மண்டலம்.

## போட்டி எண் : 79 சரியான விடைகள் (ஏசாயா 1-30 வரை)

1.தீமை செய்கிறவர்களுடைய; 2.எகிப்தியர் சகாயம் பண்ணுவது; 3.கிருபையினாலே; 4.உளுந்து கோலினாலும், சீரகம் மிலாற்றினாலும்; 5.சீயோன் குமாரத்திகள்; 6.சிங்கம்; 7.விசுவாசியாவிட்டால்; 8.பூமி; 9.அறிவில்லாமையினால்; 10.துன்மார்க்கன்; 11.விக்கிரகங்களாலும்; 12.கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள்; 13.மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்; 14.எலியாக்கீம்; 15.முறுமுறுக்கிறவர்கள்; 16.கூக்குரல்; 17.மீன்பிடிக்கிறவர்கள்; 18.ஏசாயா; 19.தானியமே, கோதுமையே; 20.மாண்ட ராட்சதர்; 21.கொடியன், சக்கந்தக்காரன்; 22.சோவான் பிரபுக்கள்; 23. புழுக்களே, பூச்சிகளே; 24. பாபிலோன்; 25.அசீரியனுக்கு.

---

## போட்டி எண் : 79 (சரியான விடை எழுதியவர்கள்)

**ஸ்ரீவில்லிபுத்தூர்**:தேவபிரியா; கிறிஸ்டிபிரியா; ஞானசெல்வி; டெய்சிராணி; ஆபிரகாம்; ஞானம்; பாஞ்சாலி; அனிதா; நாச்சியார்; குளோரி; நித்யா; சத்யா; காபிரியேல்; மெசி; மத்தேயு; மெர்சி; பரிபூரணம்; **செங்கோட்டை**:மகேஸ்வரி; S.முத்துலெட்சுமி; புஷ்பவல்லி; கிரிஜா; கோகிலா; G.முத்துலெட்சுமி; E.கலா; S.எஸ்தர்கலா; கனகவல்லி; மரகதம்; மாரிமுத்து தாவீது; டோரா; T.கலா; J.சுமதி; | **அச்சிறுப்பாக்கம்** : டாரத்தி; அபிகாயில்; ரேஷ்மா; இலக்கியா; இளங்கோ; மெர்சி; தமிழ்ச்செல்வி; பீட்டர் ஆம்ஸ்ராங்; C.தமிழ்ச்செல்வி; மெர்லின் மிராக்கள்; ஸ்டெல்லா ஜான்சி; | **தேனி** : தனம்; ராகேல்; ரவிபிரபா; எஸ்தர்; ஞானகி தேவசெல்வி; அன்புக்கனி; கிருபா; திரவியச்செல்வி; தீபா; பரிமளா; | **திருச்சி** : தனபாக்கியவதி; தங்கலதா; வனத்துமேரி; அனுஷியா; சாந்தி; மேரி; கிறிஸ்டி மகாலஷ்மி; மேரி சுஜாதா; கிறிஸ்டி; சுகந்தி;| **இறச்சகுளம்** : தஷிகா; நளினா ஷாலினி; லீலா; ஜெஸி; கனகமணி; அமலாவேணி; ஷோபா; கவிதாஸ்ரீ; ஜேஸ்மின்; எஸ்தர்; | **ஆலங்குளம் (வி)**: தாயம்மாள்; ரெஜினாசாரு; உமாரோஸ்லின்; தங்கம்; கிருபா; பிளாரன்ஸ்; ஜெயபாரதி; லதா; ரோஜா | **கடையநல்லூர்** : ஸ்டெல்லா; அகிலா; நளினி; வினோலியா; தங்கராஜ்; ஜெபசீதாலெட்சுமி|**எடப்பாடி**:அரசு அஞ்சலி; ஜோசப்மேரி; மாலதி; சுதா; எப்சிபா; புஷ்பா; | **நாகமலை** : கலா; பரிமளா; விஜிலா; மரியரூபி பிளாரன்ஸ்; ஹில்டா எலிசபெத்; |**ஓசூர்**:ஐடா; எமிமா; அன்பழகி; ஆண்ட்ரியா; ரித்திஹா; | **சேலம்**:சாரோன் ஜெயரூபி; ராணி; எஸ்தர்; தீபா; கிறிஸ்டல் ஜான்; |**சென்னை** : ஆனந்தன் லீலா; மெர்சி; சாவித்ரிபாய் மெர்லின் ஹெலன் பிரீத்தியா; ஷோசரியோ;| **ஆண்டிபட்டி**:தேவபாக்கியம்; எஸ்தர் ராஜபுஷ்பம்; மேரி; ஹெலன் மார்கிரேட்; புளோரியா; | **மதுராந்தகம்** : கிரேஸ் பியூலா; பிளசன்; பிளஸ்சி; | **அந்தமான்** : தங்கமணி; விஜய்; ஸ்டெல்லா மேரி; சலோமி; | **ஆறுமுகநேரி** : ஜாய்ஸ் மேரி; பிரேமா; எஸ்தர் வெண்ணிலா; ஜோதிமீனா; சுகிர்தா;| **நாசரேத்**:தாசன்மோசஸ்; மேரி; தேவகிருபை கலா; எஸ்தர்; | **பெருங்குளம்** : எப்சிபா; ஜெபாராஜா; பியூலா ஜோபாய் ஜெயலின் சிங்; | **இராமன்புதூர்**:அனிதா; லீதியாள்; பிரேமா; அன்னம்மாள்; |**வந்தவாசி** : அபிஷா சுமதி; விஜயா; தயாபிரெய்ஸி;| **ஒட்டப்பிடாரம்** : அமுதா; சரஸ்வதி; பானுமதி; இஸ்ரவேல் கிருபாகரன்; சுப்பிரமணியன்; | **பழனி** : சாந்தி; பிரீத்தி; ரேவதி; | **ஏரல்** : சிவகாமி; சத்யா; எப்சி;| **கொட்டிவாக்கம்** : பெனிதா; ராஜகுமாரி; அமுதவல்லி; | **திருநின்றவூர்** : மார்த்தாள்;எழிலரசி; | **நெய்வேலி** : கண்ணன்; ஜாக்குலின்மேரி; | **வடக்கு ஆத்தூர்**: மகேஸ்வரி; ரூத் பாக்யவதி; | **ஆலங்குளம்(வி)**: ஷாலினி;

## போட்டி எண் : 79 (சரியான விடை எழுதியவர்கள்)....

ஆபிரகாம்; | **பரமன்குறிச்சி** : செல்வி; சாராள் | **பாளையங்கோட்டை** : லீலா; சாந்தகுமாரி; | **குற்றாலம்** : ரூத்; வேளாங்கனி; | **காரைக்கால்** : உமா; ராஜாமணி; | **KTC நகர் (தி)** : பிரேமா ரூத்; சில்வியா; | **மதுரை** : எஸ்தர்; சுபத்ரா; | **காளையார்கோவில்** : சத்யா; | அருளானந்தம்; | **வத்ராப்** : சிவகாமி; அருள்செல்வி; | **வெள்ளாளன்விளை** : ஞானமணி எப்சிபா; அன்பு துரைராஜ்; | **ஆசாரிபள்ளம்** : ஏஞ்சல்குமார்; ஷியாமளா; | **கிருஷ்ணகிரி** : ரேச்சல்ராஜன்; ஆனி மொர்சி; | **விருத்தாசலம்** : ஜான் ஜெயகுமார்; ரோஸ்லின்; | **புதுச்சேரி** : குப்பம்மாள் : ஷீபா இபாப்; | **வல்லம் (த)** : விஜி; ஜமுனா; | **தூத்துக்குடி** : சில்வெஸ்டர்; புருசிமா; | **முத்தையாபுரம்** :மங்களம்; காபிரியேல் அந்தோணி; | **ஏர்வாடி** : மரகதம்; செல்வி; | **திருச்செந்தூர்** : பியூலா; பிரியா; | **சாத்தூர்** : கீதா வசந்தகுமாரி; சங்கீதா; | **புளியங்குடி** : ஞானமணி; சுந்தரி; | **திண்டிவனம்** : சாராள் அறிவுச்செல்வி; ஜெனித்தா; | **கடலையூர்** : ஆபிரகாம்; | **கம்பம்** : ஜோதிமணி;| **கொட்டிவாக்கம்** : எப்சிபா; | **ஆத்தூர்** : தேவி; | **தர்மபுரி** : ரூத்; | **கொட்டாகுளம்** : ஜெபமேரி; | **மூலக்கரைபட்டி** : ஷிபாராணி; | **நெல்வாய்** : ஜூலியட்; | **கூவத்தூர்** : எட்வர்ட்; | **ஏற்காடு** : டேவிட்; | **திசையன்விளை** : ஜெயசீலி; **சேலையூர்** : பெர்சிஸ் ஜாய்; | **வடக்கன்குளம்** : வின்செண்ட் செல்வி| **அரும்பாக்கம்** : மேரி; | **நாகப்பட்டினம்** : உமாமகேஸ்வரி; வின்செண்ட் ராஜ்; | **சிந்தாமணி (ம)** : பிச்சம்மாள்; | **பேயன்விளை** : பானுமதி; | **அரகூர்** : ரோஸ்லின் சாந்தி;| **மம்சாபுரம்** : யோகராணி; | **வேலூர்** : கிருபாகரன்; | **காட்பாடி** : பால்பிச்சமுத்து; | **கொங்கந்தான்பாறை** : சந்திரா; | **மணக்காவிளை** : பெனிட்டா; | **அவினாசி** : ஜீடி; | **திருக்கோயிலூர்** : டாரிஸ்; | **பழங்காநத்தம்** : ஞானம்; | **ஆம்பூர்** : ரூபி; | **ஆண்டாள்புரம்** : கனகவல்லி; | **T.N. பாளையம்** : சுஜா; | **சோனகன்விளை** : பிளஸ்சி பிரின்சஸ்;| **இளத்தூர்** : இருதயமேரி;| **மேடவாக்கம்** : பியூலா; | **உத்தமபாளையம்** : ரோமியா; | **அம்பத்தூர்** : பியூலா; | **பத்தை** : விமலாபாய்; | **உக்கிரன்கோட்டை** : குழந்தை தெரசம்மாள்; | **திருவான்மியூர்** : ஜெயபால்; | **சாயர்புரம்** : டார்லிங்; | **நாவலூர்** : தங்கமணி; | **புதுப்பாக்கம்** : ஹெலன் பிரபு; | **புஞ்சை புளியம்பட்டி** : சங்கீதா; | **சீவலப்பேரி** : ஏனோக்குராஜா; | **செண்பகராயன்புதூர்** : சினேகலா; | **காமராஜபுரம்** : ஜெனிபர்; **மடத்துக்குளம்** : ஜீன் மெர்லின் கிருபா;| **ஜாபர்கன்பேட்டை** : சுபா

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண் – 80

ஏசாயா 31- 66 வரை (இருப்பிடத்துடன் விடை எழுதவும்)

1. கர்த்தராகிய ஆண்டவர் என் ----------- திறந்தார்.
2. மூடன் இனி ----------- என்று மதிக்கப்படான்.
3. சீயோனில் ----------- இஸ்ரவேலுக்கு என் ----------- கட்டளையிடுவேன்.
4. சின்னவன் ----------- சிறியவன் -----------
5. உன் ----------- உனக்கு ----------- செல்லும்.

6. ----------- வேர்பற்றி ----------- கனிகொடுப்பார்கள்.
7. காஞ்சொறிக்கு பதிலாக ----------- எழும்பும்.
8. ஊமையன் நாவும் -----------
9. நீ ----------- என்றும் என் தேசம் ----------- என்றும் சொல்லப்படும்.
10. கர்த்தருக்கு பயப்படுதலே அதின் -----------
11. நாங்கள் அனைவரும் ----------- போல இருக்கிறோம்.
12. ----------- இதோ நான் சொல்லானாக.
13. ----------- ஸ்திரப்பட்டிருப்பாய் ----------- தூரமாவாய்.
14. என் ----------- நான் வேறொருவருக்குங்கொடேன்.
15. என்னை நோக்கிப்பாருங்கள் அப்பொழுது -----------
16. என் ----------- மனமகிழ்ச்சியினாலே -----------
17. ----------- உம்மை துதியாது.
18. ----------- உலர்ந்து ----------- உதிரும்.
19. புறாக்களைப்போல -----------
20. ----------- சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.
21. கர்த்தரால் ----------- அநேகராயிருப்பார்கள்.
22. ----------- பணியும் ----------- குனியும்.
23. எங்களுடைய ----------- அழுக்கான கந்தை போல இருக்கிறது.
24. ----------- , ----------- உங்கள் பெலனாயிருக்கும்.
25. கர்த்தருக்குக் சித்தமானது அவர் -----------
26. உன் ----------- உன் ----------- நான் வெளிப்படுத்துவேன்.
27. எகிப்தியர் சகாயம் பண்ணுவது ----------- , ----------- .
28. உன் ----------- உன் ----------- உன்னை கெடுத்தது.
29. உன் ----------- வழிகளாக்குவேன்.
30. அங்கே ----------- இருப்பதில்லை. ----------- அங்கே போவதுமில்லை.

| | |
|---|---|
| விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 05.12.2019 | சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள் தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும். |



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**


**"பரிபூரண ஜீவன்"**
**Sis.சாந்தி பால், W/o. Rev. பால் பிரகாசம்**
A.G. Church, 23- மெயின்ரோடு,செங்கோட்டை - 627 809
செல்: 88077 18002

## சிறுவர் முகாம்கள் – மதுரை, வடக்கன்குளம், செங்கல்பட்டு


















## பெண்கள் முகாம் – கரூர் மண்டலம்







Registered News Paper Regd. No. 8206 / 62






## 10-வது மாநில ஆண்கள் முகாம்










**BOOK POST**

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 2301165